பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 15 திங்கட்கிழமை (29.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 182

# ஐரோப்பிய ஒன்றியத்தினது தடை

# புலிகளை பேச்சுக்கு இழுத்துவரும்

## அடித்துக் கூறுகின்றார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, மே 29

**"தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கவிருக்கும் தடை அமைதிப் பேச்சுகளுக்கு விடுதலைப் புலிகளை இழுத்துவரும்; பேச்சுக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைப்பாட்டைப் புலிகளுக்கு ஏற்படுத்தும்."**

**- இப்படி அடித்துக் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.**

லண்டனிலிருந்து வெளியாகும் 'பினான்ஸியல் ரைம்ஸ்' நாளிதழுக்குக் கொழும்பில் வைத்து அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

"இதுவரை காலமும் உலகம் தங்களுடன் தான் என்று புலிகள் நினைத்து வந்தனர். அவர்களின் பிரசார இயந்திரம் அதிக வலுமிக்கதாக இருந்தது. இப்போது ஐரோப்பிய ஒன்றியத் தடை வருகின்றது. இத்தோடு, தங்களின் கொலைகாரப் போக்கு உத்தி இனிமேல் பலன் தராது என்பதைப் புலிகள் உணர்ந்து கொள்வர். முழு உலகத்தோடும் போராடுவதா என்பது குறித்து அவர்கள் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்திக்க வேண்டியிருக்கும். அரசியல் அறிவுடைய எவரும் அப்படிப் போருக்கு இறங்கத் துணிய மாட்டார்கள்.

"ஐரோப்பிய ஒன்றியத் தடை, மீண்டும் பேச்சு மேசைக்குத் திரும்புவதற்குப் புலிகளைப் பலவந்தப்படுத்தும்." - என்றும் ஜனாதிபதி கூறினார்.

தாம் ஒரு போர் வெறியர் என்று கூறப்படுவதை அடியோடு மறுதலித்த அவர், "நாங்கள் எதைக் கொடுக்க வந்தாலும் புலிகள் அதை ஏற்க மறுத்து விடுகின்றார்கள். ஆனால், புலிகள் பேச்சுக்கு வந்து தீர்வு குறித்துப் பேச முன்வர வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன். அவர்களின் பங்களிப்பின்றி இப்பிரச்சினைக்கு நாம் தீர்வு ஒன்றைக் காண முடியாது." - என்றும் கூறினார் அவர்.

ஆனால் -

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கண்டனம்

திருகோணமலை, மே 29

திருகோணமலை மாவட்டத்தின் அரச அதிபராக இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவரை அரசு நியமித்தமைக்கு விடுதலைப் புலிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது சிவில் நிர்வாகத்தை இராணுவமயப்படுத்தும் ஒரு நடவடிக்கை என்றும் அவர்கள் விமர்சித்துள்ளனர்.

இந்த விவகாரம் பற்றி விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளார்.

இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது தடை நடைமுறைக்கு வருமானால் இலங்கை மீது சர்வதேச அழுத்தம் அதிகரிக்கும்!

### இந்திய - நோர்வே கருத்துப் பரிமாறலில் வெளியான தகவல்

புதுடில்லி, மே 29

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைத்தீர்மானம் அமுலுக்கு வருமானால், ஜெனீவாப் பேச்சுக்களின்போது இணங்காணப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரும் சர்வதேச சமூகத்தின் கூடுதல் அழுத்தங்களுக்கு இலங்கை அரசு முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்று தெரியவருகிறது.

இலங்கை நிலைமைகள் குறித்து கடந்த சனிக்கிழமை புதுடில்லியில் வைத்து இந்திய பாதுகாப்பு விவகார ஆலோசகர் எம்.கே. நாராயணனைச் சந்தித்து நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் பேசியிருந்தார். இந்த பேச்சின் விளைவாக இந்திய அதிகாரிகள் மட்டத்தில் எழுந்த எண்ணமும், சர்வதேசத்தின் கூடுதல் அழுத்தத்துக்கு இலங்கை அரசு முகம் கொடுக்க வேண்டிவரும் என்பதாக அமைந்திருக்கிறது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக பல்வேறு மட்டங்களிலும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள அதேவேளை, இலங்கை அரசும் தனது செயற்திறனைக் குற்றம் குறைக்கு இடமன்றி ஒன்றுசேரச் செய்யவேண்டும் என்றும் இந்தச் சந்திப்பின்போது எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார் எனவும் அறியப்படுகிறது.

ஜெனிவாவில் நடந்த முதல் சுற்றுப் பேச்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வட்டுக்கோட்டையில் நேற்று 2 இளைஞர்கள் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், மே29

வட்டுக்கோட்டை மாவடிக்குச் சமீபமாக நேற்றுமாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர். அவர்களில் ஒருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அமிர்தலிங்கம் சபேசன் (வயது 26) என்பவர் உயிரிழந்தார்.

வி.கோகுலராஜா (வயது 23) என்பவர் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரி

(10ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் மீண்டும் போர் மூண்டு பெரும் யுத்தம் வெடிக்கும் சூழ்நிலை!

### சொல்ஹெய்ம் தெரிவிப்பு

இலங்கையின் தற்போதைய சூழ்நிலை மீண்டும் மோதல்கள் வெடித்து யுத்தம் ஏற்படும் அபாயத்தில் உள்ளதாக எரிக் சொல்ஹெய்ம் இந்திய பாதுகாப்புத் துறைக்குத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இலங்கை வந்த நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து சமாதான நடவடிக்கைகள் பற்றிபேச்சு நடத்தியிருந்தார். அதன் பின் நேற்று புதுடில்லி சென்று அவர் அங்கு இந்தியப் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையின் இன்றுள்ள சூழ்நிலை குறித்தும் அடுத்து நோர்வேயில் நடைபெறும் கண்காணிப்புக் குழுவுடனான சந்திப்புக் குறித்தும் எரிக் சொல்ஹெய்ம் இந்திய அதிகாரிகளுக்கு விளக்கினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த சொல்ஹெய்ம், ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது கொண்டு வரவுள்ள தடையின் பின்னணியில் (10ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை சோதனைச் சாவடியில் 20 லொறிகள் தடுத்து வைப்பு

### அவற்றில் வெடிமருந்து இருந்தனவாம்

யாழ்ப்பாணம், மே 29

ஏ-9 வீதியில் முகமாலை இராணுவச் சோதனை நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்த 20 லொறிகளை இராணுவத்தினர் கைப்பற்றித் தடுத்துவைத்துள்ளனர். அந்த வாகனங்களில் இருந்து வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டதை அடுத்து அவை தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த லொறிகளில் இருந்து சி-4 ரக வெடிமருந்து கைப்பற்றப்பட்டன என்று இராணுவப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## உலகெங்கும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஒருமித்த குரலில் இன்று உரிமை முழக்கம்!

ஈழத் தமிழர்களுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - எதிராக ஐரோப்பிய ஒன்றியமும் வேறு சில சர்வதேச நாடுகளும் எடுத்து வருகின்ற கடும் நிலைப்பாடுகளுக்குத் தமது ஆட்சேபனையை வெளிப்படுத்தும் முகமாக, உலகெங்கிலும் புலம் பெயர்ந்து வாழுகின்ற ஈழத் தமிழ் உறவுகள் அந்தந்த நாடுகளில் மாபெரும் எழுச்சி நிகழ்வுகளை இன்று நடத்துகின்றனர்.

கனடா ரொறன்ரோ, ஒட்டாவா, பின்லாந்து, இத்தாலி, ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து, டென்மார்க், சுவீடன், நோர்வே, நெதர்லாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் 'உரிமைக் குரல்' என்ற பெயரில் ஈழத் தமிழ் மக்கள் ஒன்றுகூடி ஓங்கிக் குரல் எழுப்பவிருக்கின்றனர்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் மீது கனடா அரசு அண்மையில் தடை விதித்திருந்தது.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றமும் புலிகளுக்கு எதிரான தீர்மானம் ஒன்றைச் சமீபத்தில் நிறைவேற்றியிருக்கிறது.

இதனை விட, புலிகளை முற்றிலுமாகத் தடை செய்வது குறித்து இன்று ஐரோப்பிய ஒன்றியம் தனது இறுதி முடிவை எடுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடை செய்வது குறித்தான தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும், ஈழத் தமிழர்கள் பேரினவாதிகளால் அடக்கி ஒடுக்கப்படுகின்ற உண்மை நிலைமைகளையும், தமிழ் மக்களின்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தவிக்கும் ஈழத் தமிழர்களை ஏற்றி வருவதற்கு இலங்கைக்கு இந்தியக் கப்பலை அனுப்புங்கள்!

## பழ. நெடுமாறன் கோருகின்றார்

சென்னை, மே 29

இலங்கை வன்முறைகளிலிருந்து தப்பி உயிர்பிழைக்கும் நோக்குடன் இந்தியாவுக்குத் வர ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் இலங்கைக் கரைகளில் தவம் கிடக்கின்றனர். அகதிகளான அந்தத் தமிழர்களை ஏற்றி வருவதற்கு இந்தியா கப்பலொன்றை அங்கு அனுப்ப வேண்டுமென்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் நேற்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

சென்னையில் 'நேற்று ஐ.ஏ.என்.எஸ். செய்தியாளருக்கு விசேட செவ்வியொன்றை வழங்கிய நெடுமாறன், புலிகள் இயக்கத்தைத் தடை செய்யப் போவதாகக் கூச்சலிடும் ஐரோப்பிய ஒன்றியம், விடுதலைப் புலிகளிடம் தான் கேட்ட அதே கேள்விகளை இலங்கை அரசாங்கத்திடம் எப்போதாவது கேட்டிருக்கிறதா? என்றும் வினாவினார்.

இந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

''இலங்கையிலிருந்து அகதிகளாகப் புறப்படும் தமிழர்களை ஏற்றி வருவதற்கு இந்தியா கப்பலொன்றை அனுப்ப வேண்டுமென்று நான் கோர விரும்புகிறேன். 1983 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி இலங்கைக்கு இரண்டு கப்பல்களை அனுப்பினார். அதுபோல், இப்போதும் கப்பலொன்று அனுப்பப்பட வேண்டும். அதே போன்று தமிழர்களைக் கொல்வதை நிறுத்துமாறு இந்தியா இலங்கையை எச்சரிக்க வேண்டும்.

இங்கு தஞ்சம் புகுவதற்குப் புறப்பட்டு வரமுடியாமல் ஆயிரக்கணக்கான அகதிகள் இலங்கையில் தவிக்கின்றனர். படகுகள் இல்லாமை மற்றும் படகோட்டிகளின் அச்சம் போன்றவையே இதற்கான காரணங்கள். இதனால்தான், இந்தியா கப்பலொன்றை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென்று நாம் கோருகின்றோம். தமிழரின் பிரச்சினை

நோர்வே அனுசரணையாளர்களுடன் இந்தியா வழமையான ஆலோசனைகளை நடத்துகிறது. இலங்கையின் ஜனாதிபதியும், பிரதமரும் அடிக்கடி இந்தியா வருகின்றனர். அப்படியானால் தமிழர்களின் பிரச்சினை என்ன? அதை யாரிடம் இந்தியா கேட்டறிவது?

எங்களுக்கு புலிகளுடன் பேசுவதில் சில பிரச்சினைகள் இருக்கலாம். நல்லது. அதை ஒரு புறத்தில் வைத்து விடுவோம். தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு இல்லையா?

இலங்கையின் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திக்க மீண்டும், மீண்டும் முயன்று வருகின்றனர். கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் ஊடாக அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கின்றனர். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்கிடமும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். அவர்களின் கோரிக்கை அடங்கிய கடிதமொன்றை ம.தி.மு.க. தலைவர் வைகோ பிரதமரிடம் கையளித்தார். ஆனால், எதுவுமே நடக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுவதாகக் கூறிய இலங்கை அரசு, அதனை இன்னும் நிறைவேற்றவில்லை. அப்படியிருந்தும் புலிகள் வன்முறையைக் கைவிட வேண்டுமெனக் கோருவது அர்த்தமற்றது. இலங்கைப் படையினர் தமிழர்களைத் தாக்குவதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கும் சர்வதேச சமூகம் எப்போதும் புலிகளையே விமர்சித்து வருகிறது.

சர்வதேச சமூகம் தவறிழைத்து விட்டது. நோர்வேயும், அமெரிக்காவும் தவறிழைத்து விட்டன. புலிகளைத் தடை செய்வதாக ஐரோப்பிய ஒன்றியம் கூறுகிறது. புலிகளிடம் கேட்ட கேள்விகளை இவர்கள் இலங்கை அரசிடம் கேட்டார்களா? இந்தியாவும் தவறிழைத்து விட்டது. இந்தியா இரு தரப்புக்கும் அழுத்தத்தை வழங்கியிருக்க வேண்டும். இலங்கை அரசின் அடாவடித்னங்களை வெளிக்கொணராத காரணத்தினால் பத்திரிகையாளர்களாகிய நீங்களும் தவறிழைத்து விட்டீர்கள். - என்றார் பழ. நெடுமாறன்.(ம-க)

## மேலும் 74 அகதிகள் தமிழகம் வந்தனர்

இராமேஸ்வரம்,மே29

இலங்கையிலிருந்து மேலும் 74 அகதிகள் நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் வந்தனர்.

திருகோணமலை, திருக்கடலூர், சல்லி ஆகிய பகுதிகளில் இருந்து 20 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆண்கள், 25 பெண்கள், 12 ஆண் குழந்தைகள், 11 பெண் குழந்தைகள் உட்பட 74 பேர், நான்கு படகுகளில் இராமேஸ்வரம், தனுஷ்கோடி, அரிச்சல்முனை, சேரன்கோட்டை ஆகிய கடற்கரைப் பகுதிகளில் வந்திறங்கினர்.

இவர்கள் அனைவரும் இராமேஸ்வரம் மற்றும் பாம்பன் பொலீஸ் நிலையங்களில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மண்டபம் அகதிகள் முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் 74 பேருடன் இந்த வருடத்தில் மட்டும் இதுவரை இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கு அகதிகளாக வந்திருப்போரின் எண்ணிக்கை 2,664 ஆக உயர்ந்திருக்கின்றது.(ம-க)

## ஆழ ஊடுருவும் படையணியுடன் மடுக் காட்டில் புலிகள் மோதல்

### துணைப்படை வீரர் சாவு; மற்றொருவர் காயம்

மடு,மே29

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் மடுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடி மோதல் ஒன்று இடம்பெற்றிருக்கிறது. இந்த மோதலில் புலிகளின் துணைப்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் காயமடைந்தார்.

மடுப் பகுதியிலுள்ள காட்டுக்குள் பிற்பகல் 3.30 மணியளவில் விடுதலைப் புலிகள் திடீர்த் தேடுதல் ஒன்றை நடத்தினர். அப்போது மடு தேவாலயத்திலிருந்து சுமார் 4 கிலோமீற்றர் தொலைவிலுள்ள காட்டுப் பகுதியில் ஊடுருவி வந்து கொண்டிருந்த ஆழ ஊடுருவும் படையணியினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடி மோதல் வெடித்ததாகக் கூறப்பட்டது.

இதன்போது, படையினர் தாம் கொண்டு வந்த கிளைமோர் ஒன்றை வெடிக்க வைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதில் புலிகளின் துணைப்படை வீரர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார். புலிகளின் உக்கிரமான தாக்குதலினால் ஆழ ஊடுருவும் படையணியினர் தப்பியோடி விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் கைவிட்டு ஓடிய கிளைமோர்க் குண்டு ஒன்று, 2 'கிற்பேக்', ஏ.கே-47 ரகத் துப்பாக்கிக்கான ரவைகள், உணவு ரின்கள் உட்பட மற்றும் சில இராணுவ உபகரணங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

இந்த ஊடுருவல் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். இனியவன் தெரிவித்தார்.

(ம-க)

## இந்தியா செல்ல வேண்டாமென மக்களுக்கு மன்னார் இராணுவத் தளபதி எச்சரிக்கை

மன்னார், மே 29

கடந்த சில மாதங்களாக திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் வன்முறைகள் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து மன்னார் பேசாலைப் பகுதியில் தங்கியுள்ள மக்களை இந்தியா செல்ல வேண்டாம் என மன்னார் இராணுக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் முனசிங்க எச்சரித்துள்ளார்.

இராணுவத்தின் கனரக வாகன அணியினரின் பலத்த பாதுகாப்புடன் நேற்றுமுற்பகல் 11 மணியளவில் பேசாலைக்கு வந்தார் தளபதி முனசிங்க. பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் தங்கியுள்ள திருமலை மக்களை அவர் சந்தித்துப் பேசினார்.

அப்போது திருமலை மக்களுக்கு ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகத் தாம் மிகவும் வருந்துகிறார் என்று அவர் தெரிவித்தார்.

தற்போது திருமலையில் அமைதி நிலவுகிறது என்று தெரிவித்த அவர், மக்களை மீண்டும் அங்கு சென்று குடியேறுமாறு கேட்டுக்கொண்டார். அங்கு மீளக் குடியமர்ந்தால் சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அடிப்படை மனிதாபிமான உதவிகளையும் தாம் செய்வார் என்றும் குறிப்பிட்டார் தளபதி.

சரி. திருமலைக்குத்தான் திரும்பிச்செல்ல விரும்பவில்லையென்றால் இங்கேயே - மன்னாரிலேயே - சிலகாலம் இருங்கள். ஆனால், படகுகளில் இந்தியாவுக்குப் போகாதீர்கள். அதனை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்றும் மன்னார் படைத்தளபதி மேஜர் ஜெனரல் முனசிங்க மக்களிடம் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது மன்னார் பிரதேச செயலர் ஸ்ரான்லி டிமெல் பேசாலை பங்குத் தந்தை வின்சன் பற்றிக் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-க)

## இறுதிப் போருக்கு உரம் சேர்க்கும் மன எழுச்சியை உருவாக்குங்கள்

### படைப்பாளிகளுக்குப் புதுவை இரத்தினதுரை அறைகூவல்



கிளி.,மே29

இறுதிப் போருக்கு உரம் சேர்க்கும் மன எழுச்சியை தமிழ் மக்களிடம் படைப்பாளிகள் உருவாக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக நடுவப் பணியகத்தில் படைப்பாளி கூடல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் பேசிய போதே புதுவை இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்கள் இன்று நெருக்கடியான சூழலுக்குள் வாழ்கின்றனர். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்கள் நாளாந்தம் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அரசு போரைத் தொடங்கி நடத்திக்கொண்டிருக்கின்றது.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் அரசின் கொடுமைகள் அதிகமான சூழலில் சமாதானத்தின் உண்மை முகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் யாவரும் போருக்குத் தயாராக இருக்கிறார்கள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் போரை மக்கள் தமது கையிலெடுத்துள்ளார்கள். அவர்கள் அங்கு படையினரிடம் அகப்பட்டுள்ளார்களே தவிர அடிமைகளாகிவிடவில்லை. இதை உணர்த்தும் வகையில்தான் மக்கள் அங்கு போரை தமது கையில் எடுத்துள்ளார்கள்.

அதேவேளை, நமது பகுதிகளில் மக்கள் முழுமையாகப் போராட்டத்துக்குத் தயாராகிறார்கள். ஒட்டுமொத்தமாக எழுச்சிபெற்றுள்ள எமது மக்களுக்கு மன எழுச்சியை ஏற்படுத்த வேண்டும். நம்பிக்கையை வலுப்படுத்தும் இந்த எழுச்சி நமது விடுதலைக்கான இறுதிப் போருக்கு உரம் சேர்க்கும். அதனைப் படைப்பாளிகள் செய்ய வேண்டும் - என்றார் இரத்தினதுரை.

இந்தச் சந்திப்பில் கிளிநொச்சியில் உள்ள படைப்பாளிகள் பங்கேற்றனர். (ம)

## அமைச்சரவை மாற்றம் ஒரு மாதம் தாமதமாகும்

கொழும்பு, மே 29

இவ்வார இறுதியில் தாம் மேற்கொள்ளவிருந்த அமைச்சரவை மறுசீரமைப்பு நடவடிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் ஒரு மாத காலத்திற்கு ஒத்திவைத்திருக்கிறாரென அறியவருகிறது.

சோதிடர்களின் ஆலோசனைப்படியே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஜனாதிபதி மேற்கொண்டாரென அரச உயர்மட்டத்துடன் நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

ஆனால், அமைச்சரவையில் இடம்பெற்று, அரசுடன் இணைந்துகொள்ளுமாறு ஜனாதிபதி ஜே.வி.பியினருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் எனவும், ஜனாதிபதியின் இந்தக் கோரிக்கையை ஆராய்ந்து பதிலளிப்பதற்கு ஜே.வி.பியினருக்கு போதியளவு கால அவகாசத்தை வழங்கும் வகையிலேயே அமைச்சரவை மறுசீரமைப்பு செயற்பாட்டை ஒரு மாத காலத்திற்கு ஜனாதிபதி ஒத்திவைத்திருக்கிறாரென்றும் விடயமறிந்த வேறு வட்டாரங்கள் கூறின.

ஒருமாத காலத்தின் பின்னர் இடம்பெறும் அமைச்சரவை மறுசீரமைப்பின் போது ஜே.வி.பி., இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்கள் சிலருக்கு அமைச்சு மற்றும் பிரதியமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ம-க)

## ஐ.தே.கட்சி எம்.பிக்கள் ஐவரை அரசுப் பக்கம் இழுக்க முயற்சி!

### பதில் நடவடிக்கைக்கு ரணிலும் தயாராம்

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற் உறுப்பினர்கள் ஐந்துபேரை ஆளுங்கட்சிக்குள் கொண்டுவர மறைமுகப் பேச்சுகள் நடத்தப்பட்டுவரும் தற்போதைய சூழ்நிலையில், தமது கட்சி உறுப்பினர்கள் ஒருவரைத் தானும் ஆளுங்கட்சி உள்வாங்குமாயின் அமைதி முயற்சிகள் தொடர்பான சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளாதிருக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற் உறுப்பினர்கள் ஐந்துபேரை ஆளுங்கட்சிக்குள் உள்வாங்கி அவர்களுக்கு முக்கிய அமைச்சு மற்றும் பிரதியமைச்சுப் பொறுப்புகளை வழங்குவதற்கு அரசுத் தரப்பு தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்துடன் இந்த விடயம் குறித்து ஐ.தே.கட்சி எம்.பிக்கள் சிலருடன் அரச உயர்மட்ட உறுப்பினர்கள் சிலர் ஏற்கனவே பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியிருக்கின்றனர் என்றும் தெரிகின்றது.

இந்நிலையில், சில தினங்களுக்கு முன்னர் தமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் இவ்விடயம் குறித்து மந்திராலோசனை நடத்தியிருக்கும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இனிமேல் ஐ.தே.கட்சியின் உறுப்பினர்களை பதவியாசை காட்டி அரசு விலைக்கு வாங்குமானால் சர்வகட்சி மாநாட்டை ஐக்கிய தேசியக் கட்சி புறக்கணிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்.

அதேபோல், அத்தகைய நிலைமை ஏற்பட்டால் அமைதி முயற்சிகள் மற்றும் இதர விடயங்களில் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை வாபஸ் பெறுவது குறித்தும் ஐ.தே.கட்சித் தலைமை பரிசீலித்து வருவதாக அக்கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (ம-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# உடனடி யுத்தமா? அமைதி நீடிப்பா? இன்று ஓரளவுக்குத் தெரிய வரும்

இலங்கைத் தீவில் கூர்மையடைந்து வரும் இன முரண்பாடு மீண்டும் பெரும்போராக வெடிக்கப் போகின்றது என்பது வாஸ்தவம்தான். எல்லோரும் எதிர்பார்க்கும் ஒன்றுதான் அது.

ஆனால், அந்தப் போர் இப்போது - உடனடியாக - வெடிக்குமா? இல்லை அது தாமதமாகுமா? - இதுதான் பலர் மனதிலும் இன்று எழும் கேள்வி.

இன்றிரவு இதற்கான முடிவை ஓரளவு ஊகிக்கக் கூடியதாக இருக்கும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

இருபத்தியைந்து ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைச்சர்கள் கவுன்ஸில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதா என்பது குறித்து இன்று பிரஸல்ஸில் கூடி முடிவு செய்ய இருக்கின்றது. அதன் தீர்மானம் இன்று நள்ளிர்வு அல்லது நாளை காலை வெளியாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

போர் விரைவில் வெடிக்குமா, இல்லையா என்பதை ஐரோப்பிய ஒன்றியத்தின் இன்றைய முடிவும் ஓரளவுக்குத் தீர்மானிக்கும் என்றுதான் அரசியல் நோக்கர்கள் கருது கின்றார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் கொண்டு வரக் கூடிய தடை மூன்று வகைகளில் அமைதி நிலையைப் பாதித்து, யுத்தம் விரைந்து வர வழி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒன்று - ஏற்கனவே இந்தப் பத்தியில் நாம் பல தடவைகள் சுட்டிக் காட்டியமை போன்று, சிங்கள அரசுத் தலைமைகளால் பல தடவைகள் அமைதி முயற்சிகளில் ஏமாற்றப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, சிங்கள அரசுத் தலைமைகளில் முற்றாக நம்பிக்கை இழந்த தமிழர் தரப்பினர் - தமிழீழ விடுதலைப் புலிகள் - இம்முறையும் தென்னிலங்கை அரசுடன் சமாதான எத்தனங்களில் ஈடுபட இணங்கியிருக்கின்றார்கள் என்றால், அதற்குக் காரணம் இம்முறை சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலும், அனுசரணையிலும் இந்த முயற்சிகள் நடக்கின்றன என்ற நம்பிக்கைதான். சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பில் - நேரடிப் பார்வையில் - இந்தப் பேச்சுகள் நடைபெறுவதால் இம்முறையும் தென்னிலங்கை அரசு, தமிழர்க ளுக்கு நியாயம் செய்யாமல் ஏமாற்றி விட முடியாது எனத் தமிழர்கள் நம்பினார்கள்; இப்போதுவரை நம்புகின்றார்கள்.

இந்த யதார்த்தத்தைப் புரியாமல் தமிழர்களின் விடுதலைப் போராட்ட சக்தியான புலிகளைத் தடைசெய்து, தமிழர்களைப் புறமொதுக்கி, தனிமைப்படுத்தி, ஓரங்கட்டும் வகையில் - மொத்தத் தில் அவர்களை ஏமாற்றும் விதத்தில் - சர்வதேச சமூகம் நடந்து கொள்ளுமானால்-

சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக்கையையும், அவர்களின் பங்களிப்புடனான அமைதி முயற்சிகள் மீதான நம்பிக்கையையும் இழக்கும் தமிழர் தரப்பு மீண்டும் யுத்தத்துக்குச் செல்வது தமது நியாயமான உரிமைகளை - அபிலாஷைகளை - வென்றெடுக்க முற்படுவது தவிர்க்க முடியாததாகும். அந்நிலைமை தோன்றினால் யுத்தம் விரைந்து வருவது தடுக்க - தவிர்க்க - முடியாததாகும்.

இரண்டாவது - ஐரோப்பிய ஒன்றியத் தடை வருமானால், இலங்கையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பில் ஈடுபடும் ஐந்து நோர்டிக் நாடுகளில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உட்பட்ட மூன்று நாடுகளின் - டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகியவற்றின் - கண்காணிப்பாளர்கள் அப்பணியைச் செய்வதற்கான நியாயத் தகுதியை இழக்க, கண்காணிப்புப் பணி பெரிதும் பாதிப்புற்று, சீர்கெடும். இது யுத்தத்தை விரைந்து வரவழைக்கும் நிலைமையை உருவாக்கும்.

மூன்றாவது - புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் இவ்வாறு தடை செய்வது நியாயமான உரிமைகளை வேண்டிப் போராடும் தமிழர்களின் பக்கத்தில் இருக்கின்ற நியாயங்களை நிராகரித்து, அவர்களுக்கு எதிரான சிங்கள - பௌத்த பேரினவாத ஒடுக்குமுறைப் போக்கை சர்வதேசம் அங்கீகரிக்கின்றது என்ற பிழையான சமிக்ஞையைத் தென்னிலங்கை அரசுக்கு வழங்குவதாக அமையும். அது பேரினவாத அடக்குமுறைப் போக்கை உற்சாகப்படுத்தி - உஷார்படுத்தி - தூண்டிவிட, அதற்கு எதிராகத் தமிழர் தரப்பு மீண்டும் கிளர்ந்தெழும் சூழல் விரைவாக ஏற்படும். அதனால், யுத்தமும் விரைந்து வரும்.

இந்தக் கள யதார்த்தங்கள் எல்லாம் புரியாமல் - அல்லது புரிந்தும் புரியாதவர்கள் போலக் காட்டிக் கொண்டு - சிங்கள அரசுத் தலைவர்கள் சர்வதேச சமூகத்துக்குப் பிழையான தகவல்களையும், கருத்துக்களையும் கூறி, அதனைத் தவறான திசையில் வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத் தடை விரைந்து யுத்தத்துக்கு வழி செய்யும் என்ற உண்மையை மூடி மறைத்து, அந் தத் தடை புலிகளை அமைதிப் பேச்சு மேசைக்கு விரைந்து கூட்டி வரும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகாக்களும் புனைகதை விடுவது இத்தகைய தவறான வழிகாட்டலின் உச்சக் கட்டம்தான்.

# வடக்கு - கிழக்கினுள் இடம்பெயர்ந்து வசிப்பவர்களுள் வீடு இல்லாதவர்களின் விவரங்கள் சேகரிப்பு ஆரம்பம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தினுள் இடம்பெயர்ந்து வசிக்கின்றவர்களுள் வீடுகள் இல்லாதவர்களின் விவரங்களை மீள்குடியேற்ற அமைச்சு திரட்டி வருகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் இது தொடர்பான சுற்றறிக்கையொன்றினை துரித மீள்குடியேற்றம் மீள்குடியேற்றத்துக்கான அமைச்சின் பணிப்பாளர் நாயகம் எம்.ஏ.சி.முகிதீன் அனுப்பிவைத்துள்ளார்.

இந்த சுற்றறிக்கையில்,

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்து வீடில்லாதிருப்போரின் விவரங்களையும் - வீடுகள் கிடைக்கப்பெற்றவர்களின் விவரங்களையும் அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் இடம்பெயர்ந்து வசிக்கின்ற குடும்பங்களின் விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (175)

# மீன்பிடிப்பதற்கு நேரக் கட்டுப்பாடு சுழிபுரத்தில் 200 குடும்பங்கள் பாதிப்பு

வலி.மேற்கு, மே29

பொன்னாலை காட்டுப்புலம், சுழிபுரம் பகுதி கடற்றொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்டுவரும் கெடுபிடிகளாலும் மீன்பிடிப்பதற்கான நேரக் கட்டுப்பாடு காரணமாகவும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், சுமார் 200 கடற்றொழிலாளர்கள் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

பொன்னாலை, கல்லைவேம்படி, காட்டுப்புலம், வறுத்தோலை, சுழிபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் மீது சுழிபுரம் பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் கடும் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாலை 4 மணிக்கு முன்னர் கடற்படையினரின் காவல் அரணுக்குள் சென்றுவிடவேண்டும்.

- இவ்வாறு செல்வோர் அடுத்தநாள் காலை 6.30 மணிக்கே கரை திரும்ப முடியும்.

குறிப்பாக மீன்பிடி நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் கடற்கரையில் கம்பிகளினால் சுற்றி அடைக்கப்பட்ட இடங்களுக்குள்ளேயே மீனவர்கள் தங்கியிருக்கவேண்டும். இதற்குள்ளேயே நடமாடவும் முடியும். புதிதாக வாடிகள் எதனையும் அமைக்கமுடியாது. ஏற்கனவே உள்ள வாடிகளைச் சுற்றி கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது.

வாடிகள் இல்லாமல் பெரும் எண்ணிக்கையிலான கடற்றொழிலாளர்கள் உள்ளனர்.

வாடிகள் அமைப்பதற்கு அனுமதி கேட்ட கடற்றொழிலாளர்களுக்கு கடற்படையினர் அனுமதி வழங்கவில்லை. இதனால் இவர்கள் கடலுக்குள் செல்லாத நேரங்களில் இளைப்பாறுவதற்கென வெட்டவெளியில் இருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடற்படையினரின் இந்த கடும் கெடுபிடிகளினால் பல கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலை கைவிட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் கடற்படையினரின் கெடுபிடிகளையும் நேரக் கட்டுப்பாட்டையும் நீக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மழைகாலத்துக்கு முன்னர் புதிய வாடிகளை அமைப்பதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (175)

# தீவகத்தில் மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளின் அபிவிருத்தியில் பாதிப்பு

ஊர்காவற்றுறை, மே29

அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் தீவுப் பகுதியில் சில கிராமங்களில் இருந்து பொதுமக்கள் இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து அங்கு மேற்கொள்ளப்பட்டு வந்த அபிவிருத்திப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

குறிப்பாக அல்லைப்பிட்டி, மெலிஞ்சிமுனை, தம்பாட்டி, கோட்டையடி ஆகிய பகுதிகளில் இருந்து கணிசமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்பகுதிகளில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கென பல்வேறு வகைக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தன.

தற்போது அங்கிருந்து இடம்பெயர்ந்த பொதுமக்களிடம் கடன் மீதிகளை மீள அறவிடுவதில் சிக்கல்கள் எழுந்துள்ளதாக அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர் ஒருவர் தெரிவித்தார். (16)

## திருநெல்வேலியில் சனியன்று தங்கரதம் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்,மே29

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தங்கரதத்தின் வெள்ளோட்ட விழா எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத்தில் தற்பொழுது நடைபெற்றுவரும் வருடாந்த பெருவிழாவின் 9ஆம் திருவிழாவான அன்றைய தினம் மாலை பத்திரகாளி அன்னை தங்கரதத்தில் வெளிவீதியுலா வருகை தருவார்.

திருநெல்வேலி திர்ஷிகா கலைக்கூடத்தின் ஸ்தபதியார் நடராஜா சற்குருநாதன்(குரு) ஆச்சாரியாரின் மாணவனும் தனுஷா சிற்பாலயத்தின் ஸ்தபதியுமான பரம்சோதி சதீஸ்வரன் இந்த தங்கரதத்தினை நிர்மாணித்துள்ளார்.

திருநெல்வேலி பத்திரகாளிகோயிலடியைச் சேர்ந்த சதாசிவம் சின்னையா குடும்பத்தினர் இந்த தங்கரதத்தினை தமது உபயமாக வடிவமைத்துள்ளனர்.

# லெப்.கேணல் வீரமணியின் வித்துடல் கிளிநொச்சி துயிலும் இல்லத்தில் விதைப்பு

## தளபதிகள் பலரும் நேரில் அஞ்சலி

கடந்த 24 ஆம் திகதி நாகர்கோயில் பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் சாவடைந்த நாகர்கோயில் பகுதி கட்டளைத்தளபதி லெப்.கேணல் வீரமணியின் வித்துடல் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது.

அன்றைய தினம் பளையிலும், வடமராட்சி கிழக்கிலும் வித்துடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதியில் கிளிநொச்சியிலும் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

காலை 7.30 மணியளவில் பளை தமிழீழ காவல் துறையின் காவல் பணிமனையில் வித்துடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வீரவணக்க நிகழ்வு இடம்பெற்றது.

போராளி விடுதலை தலைமையில் நடைபெற்ற வீரவணக்க நிகழ்வில் பொதுச்சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தளபதிகளில் ஒருவரான கோபித் ஏற்றினார். வித்துடலுக்கு மாவீரனின் துணைவியார் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து மலர்மாலைகளை தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ. தமிழேந்தி, தளபதி வீமன், சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி சிறப்புத் தளபதி நகுலன் ஆகியோர் அணிவித்தனர்.

வீரவணக்க உரைகளை வடபோர் முனைக் கட்டளைத் தளபதி லோரன்ஸ், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த பாவலன் ஆகியோர் நிகழ்த்தினர். மலர் வணக்கத்தினை தளபதி ஜெரி ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதிக்கு வித்துடல் எடுத்துச் செல்லப்பட்டது. தாளையடி சந்திப் பகுதியில் இருந்து உடுத்துறை மகாவித்தியால மாணவர்களின் இசை அணிவகுப்புடன் வித்துடல் அரசியல்துறை செயலகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் இசையூரான் தலைமையில் வணக்க நிகழ்வுகள் நடைபெற்றது.

வித்துடலுக்கு மாவீரரின் துணைவியார் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து மலர்மாலைகளை வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொது முகாமையார் பாலசிங்கம், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி நகுலன், வடமராட்சி கிழக்கு மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழரசன் ஆகியோர் அணிவித்தனர்.

வணக்க உரைகளை வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சூரியகுமார், வடபோர் முனைத் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் ஆகியோர் நிகழ்த்தினர்.

பின்னர் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வித்துடல் இறுதி வணக்கத்திற்காக வைக்கப்பட்டது.

போராளி பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரரின் தாயார் ஏற்றினார். வித்துடலுக்கு மாவீரரின் துணைவியார் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து மலர் மாலைகளைப் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, தளபதி கேணல் தீபன், தளபதி கேணல் பால்ராஜ், தளபதி கேணல் ஜெயம், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் ந.தமிழன்பன் உட்பட தளபதிகள், பொறுப்பாளர்கள் எனப் பலர் அணிவித்தனர்.

வணக்க உரைகளை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தளபதி கேணல் தீபன், தளபதி கேணல் பால்ராஜ் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து மாவீரரின் தயார் மலர் வணக்கத்தினை ஆரம்பித்து வைக்க தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் உணர்ச்சியுடன் வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து லெப்.கேணல் வீரமணியின் வித்துடல் பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது. (405)

**உதயவாக்கு**

நல்ல நட்பை இழப்பதை விட கொஞ்சம் பணத்தை இழப்பது மேலானது.

**நாளை**

வைகாசி 16
செவ்வாய்க்கிழமை
30.05.2006
திதி : திருதியை
முற்பகல் : 10.39
நட்சத்திரம் :திருவாதிரை
முற்பகல் : 09.20
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 10.22 - 11.52
ராகுகாலம் : 02.52 - 02.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதார வாழ்த்துகின்றேன்



'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ள.ஈழத்தின் பிரபல நாதஸ்வரக் கலைஞர்

**V.K.கானமூர்த்தியை**

பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென மனதார வாழ்த்துகின்றேன்.

திர்ஷிகா கலைக்கூடம்,
அரசடிலேன், திருநெல்வேலி கிழக்கு.

ஸ்தபதி ந.சற்குருநாதன்,
(குரு) ஆச்சாரியார்.



# PATRICIAN INSTITUTES
## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

இந்த நிகழ்வு Sewa Lanka Foundation இன் ஆதரவில் நடைபெற்ற பயிற்சிகளுக்கும், எமது நிறுவனத்தில் பயின்ற மாணவர்களுக்குமான நிகழ்வு ஆகும்.

இந்த நிகழ்வு எதிர்வரும் 31-05-2006 அன்று காலை 9 மணிக்கு "அகவொளி மண்டபத்தில்" நடைபெறும்.

யாழ்.ஆயர் அவர்களினால் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்பதனை அனைத்து மாணவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

எல்லா மாணவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கிடைக்காதவர்கள் உடன் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்
**பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனம்,**
**59, St.PATRICK'S ROAD, JAFFNA.**
(சி/49448)(26.14.17) **2226148**



# கண்ணீர் அஞ்சலி

எமது துறையின் 4ஆம் வருட மாணவன் வெ.ஜெகதீஸ்வரனின் அன்புத் தந்தை

**கணபதி வெற்றிவேல்**

நேற்று (28.05.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(50628)(23.17.14) - சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம், யாழ்.பல்கலைக்கழகம்.



# கண்ணீர்ப் பூக்கள்



கொக்குவில் கற்புலத்து மனோன்மணி இந்து சமய அபிவிருத்திச்சங்க போசகர்

அமரர்

**கந்தையா இராமநாதன் (J.P.)**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தவருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொக்குவில் — கற்புலத்து மனோன்மணி, இந்து சமய அபிவிருத்தி சங்கம்.
(50609)(23.17.14)



# 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 24 - 10 - 1957



இறப்பு 29 - 05 - 1985

## திருமதி அன்ரன் ஆன்சலா

இருபத்தொரு ஆண்டுகள் கழிந்துவிட்டதே!
எம் குல விளக்காய் எமக்கெல்லாம்
நல்வாழ்வும் வளமும் அளித்த
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆறாத்துயரில் துடிக்கின்றோம்
எம்மால் உம்மை மறக்க முடியாது
உங்கள் நீங்காத நினைவுடன்
என்றென்றும் வாழ்கின்றோம் - அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

21/1, புதுவீதி,
பாஷையூர்,
கொய்யாத்தோட்டம்.

பிள்ளைகள்:
டென்சில், சிரோன்.

(50629)(26.14.17)


# ஆங்கில மொழிவிருத்தி செயற்பாட்டு முகாம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான ஆரம்பக்கல்வி ஆங்கிலமொழி விருத்தி செயற்பாட்டு முகாம் எதிர்வரும் 5ஆம்,6ஆம் திகதிகளில் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஆனந்தராசா, 'பொப்லெப்' செயற்றிட்ட இணைப்பாளர் எஸ்.மைக்கல் ஆகியோர் தென்மராட்சி கல்வி வலய ஆங்கில பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர்களின் வழி நடத்தலில் இந்த முகாமினை நடத்தவுள்ளனர்.

வலயப் பாடசாலைகளின் ஆங்கில ஆசிரியர்கள், பண்டிதர்வேலுப்பிள்ளை நிதிய அனுசரணையுடன் நடத்தப்படும் ஆங்கில பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வோர் மற்றும் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வர மகாவித்தியாலயம் ஆகியவற்றில் தரம் நான்கில் கற்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரை இந்த முகாமில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.(117)


# யாழ். - கொழும்பு - யாழ்.

மேலதிக விமான சேவை
30.05.2006

முன்பதிவுகளுக்கு
சலுகைக் கட்டணம்

தொடர்புகளுக்கு:
MANOJ AIR TOURS (PVT) LTD,
32, CLOCK TOWER ROAD, JAFFNA.
021 222 3916, 0777 801038, 0777 517019.
(சி.49449)



# Hatton National Bank

## அடகுப்பொருள்களை மீட்டல் / விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளைகளான யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி ஆகிய கிளைகளில் அடகுசேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு,

நீங்கள் பெற்ற அடகுக்கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருள்களை ஒருவருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும் என்பதனை அறியத்தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூ500) செலுத்தி காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஒருவருடத்திற்கு மேற்பட்ட அடகுப்பொருள்களை மீட்க/காலாவதித் திகதியை நீடிக்க, ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப்பொருள்கள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

(சி.49442)(23.17.14.26) - முகாமையாளர்.


# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள NP G.S.XXXX தொடர் இலக்க முடைய ஸ்கூட்டர் (Select II) விற்பனைக்குண்டு. மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில்.T.P.: 0212225230 (50617)

காவலுக்குரிய டோபர்மன் பின்ச்சர் x டேன் நாய்க்குட்டிகள் மிக மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவராஜா அவென்யூ, தபாற்பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. 0777491062. (50580)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறோயிலர் குஞ்சுகள் 31-05-2006 மாலை விநியோகிக்கப்படும். ரஜீவ்- ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை -ஸ்ரான்லிறோட், P.ரவி- சாவகச்சேரி, நாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம்- மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.T.P.: 2222867, 2223529 (50631)

## தேவை

கேபிள் தொலைபேசி/ RLதொலைபேசி/ மோட்டோரோலா தொலைபேசி/சன்டெல் தொலைபேசி உடன்தேவை தொடர்பு: 0777590851 (50627)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1972 இல் பிறந்த பூரம் 2ஆம் பாதம் அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு ஏற்ற மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு:0776048906 (50606)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

O/L கணிதம் By: வரதராஜா
வார இறுதி வகுப்புகள்
426,(302)K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.
THE ROYAL IS THE BEST.

## குத்தகைக்கு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்யமான ஹோட்டல் ஒன்று குத்தகைக்கு விடப்படும்.

தொடர்பு : 0777178495
(சி/49436)

## தேவை

கொழும்பில் தங்கி இருந்து தையல் தைக்கக்கூடிய அனுபவம் உள்ள பெண் தேவை.
தொடர்பு : 112 - 505325


# இதய அஞ்சலி

ஒட்டுமடத்தைச் சேர்ந்த
**அமரர் தர்மகுலசிங்கம் தவசீலன் (தினேஷ்)**



ஆண்டவன் படைப்பு 03-07-1983

அரக்கனின் அழிப்பு 26-05-2006

எம்மோடு ஒன்றாக இணைந்துவிட்ட எம் இனிய நண்பனே!
உம்பாச விதைகளெல்லாம் விருட்சமாகி நிற்குதய்யா!
அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாழ்?
கரைபுரண்டு ஓடுதய்யா அன்புவெள்ளம்
காலத்தால் அழியாது நின்கருணையும் அன்பும்
கண் கலங்கி நிற்கின்றோம் உன்னை இழந்திங்கு.

அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்,அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(50626)(26.17.14) துயருறும்: நண்பர்கள்.



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

782 சிவப்பு

இடபம்

26-05-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5177824-5191549

வெற்றி இலக்கங்கள் **03 19 28 39**

ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/- வெல்லப்படவில்லை

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 67,68,470/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,01,153 | 10/- | 30,11,530/- |
| 2 இலக்கங்கள் | 27,673 | 20/- | 5,53,460/- |
| 1 இல+லக்கினம் | 27,401 | 30/- | 8,22,030/- |
| 2 இல+லக்கினம் | 2,502 | 100/- | 2,50,200/- |
| 3 இலக்கங்கள் | 748 | 500/- | 3,74,000/- |
| 3 இல+லக்கினம் | 61 | 5,000/- | 3,05,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | | | 57,16,220/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,59,547 | | 67,68,470/- |

இந்த செவ்வாய்க்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 16,72,600/-

| | |
|---|---|
| பதுளை | 5182905-7-06 |
| மாத்தறை | 5179348-6-54 |
| கேகாலை | 5187727-4-93 |
| மாத்தளை | 5185003-1-68 |
| அனுராதபுரம் | 5185338-0-78 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தலளவைக் கருவிகள் முத்திரையிடும் பணி ஆரம்பம்

கிளிநொச்சி,மே29

கந்தபுரம், வன்னேரி ஆகிய பகுதிகளில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் சரிபார்த்து முத்திரையிடும் செயற்பாடு கடந்த வாரம் ஆரம்பமானது.

இத்தியடி அம்மன் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள நிறுத்தலளவைப் பிரிவுச் செயலகத்தில் முத்திரையிடும் செயற்பாடு எதிர்வரும் 5ஆம் திகதிவரை நடைபெறும்.

நிறுத்தலளவைக் கருவிகளைப் பயன்படுத்தும் அனைவரும் குறித்த நாளில் அவற்றை முத்திரையிட்டுக் கொள்ளுமாறு நிறுத்தலளவைப் பிரிவு, வருவாய்ப்பகுதியினர் கேட்டுக்கொள்கின்றனர்.

# சாயிசேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் மருத்துவமுகாம் தண்ணிமுறிப்பில்

புதுக்குடியிருப்பு,மே29

தண்ணீரூற்று, முள்ளியவளை சாயி சேவா நிறுவனத்தினர் மருத்துவ வசதிகள் அற்ற தண்ணிமுறிப்புக் கிராமத்தில் நடமாடும் இலவச மருத்துவ சேவையை மேற்கொண்டு வருகின்றனர்.

வாரஇறுதி நாள்களில் இந்த மருத்துவ சேவை நடத்தப்பட்டு வருகிறது.

முறிப்பு, நீலமண்டபுரம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இங்கு வந்து சிகிச்சைகள் பெற்று வருகின்றனர்.

இந்தக் கிராமங்களுக்கென ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் இல்லாமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் 12 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள முள்ளியவளைக்கோ அல்லது முல்லைத்தீவுக்கோ இவர்கள் சென்று சிகிச்சை பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவர்களது கிராமங்களிலிருந்து 10 கிலோமீற்றர் தூரத்தில் ஒரு வைத்தியசாலை இருக்கின்ற போதும் அங்கு மருத்துவர்கள் எவரும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. (353)

## சுகாதாரக் கண்காட்சி

ஒட்டுசுட்டான்,மே29

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முத்துஐயன் கட்டு வலதுகரை முத்துவிநாயகர்புரம் கிராமத்தின் பொதுநோக்கு மண்டபத்தில் சுகாதாரக் கண்காட்சியும் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டலும் அண்மையில் இடம்பெற்றன.

கற்சிலைமடு தியாக தீபம் திலீபன் மருத்துவமனை சிறப்பு மருத்துவப் போராளிகளாலும் முதலுதவி அணியினராலும் நடத்தப்பட்டது.

சிறப்பு மருத்துவப் போராளி ஈழவாணி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் விசேட நடமாடும் மருத்துவ சேவையும் இடம்பெறுவதாக அவர் தெரிவித்தார். (341)

# குடிசையில் தீ; குழந்தை மரணம்!

வட்டக்கச்சி,மே29

எதிர்பாராத விதமாகக் குடிசை தீப்பிடித்ததால் குடிசைக்குள் உறங்கிக் கொண்டிருந்த ஒன்றரை வயதுக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை பரந்தன் முதலாம் கட்டைப் பகுதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த ஜெ.அபிசன் என்னும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

நண்பகல் வேளையில் குழந்தை குடிசைக்குள் ஏணையில் தூங்கிக்கொண்டிருந்த நேரத்தில் அடுப்பிலிருந்து நெருப்பு குடிசைக்குள் பரவியது.

குழந்தையின் தாய் கடைக்குச் சென்றிருந்தார். குடிசையில் தீ பற்றியதைக் கண்ட அயலவர்கள் அதற்குள் இருந்த குழந்தையை சிரமத்தின் மத்தியில் மீட்டனர். உடனடியாகக் குழந்தையை வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் சிகிச்சை பயனளிக்காமல் குழந்தை உயிரிழந்தது. குடிசை முற்றாக எரிந்ததுடன் அதனுள் இருந்த உடைமைகளும் எரிந்து நாசமாகின. (352-405)

## சமாதானப் பிரார்த்தனை

ஒட்டுசுட்டான்,மே29

தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்ப துயரங்கள் விலகி அவர்களுக்குச் சுபீட்சமான வாழ்வு கிடைக்கவேண்டுமென ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சமாதானப் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (341)

## விசுவமடுவில் தற்காப்புப் பயிற்சி

பரந்தன், மே29

விசுவமடுப் பிரதேசத்தில் கிராம ரீதியாக மக்களுக்குத் தற்காப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு இப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிராமப் பொறுப்பாளர்களின் ஒழுங்குபடுத்தலில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. வயது வேறுபாடின்றி அனைவரும் பயிற்சி பெற்று வருகின்றனர். (352)

# மூன்று கிராமங்களில் 'ஒக்ஸ்பாம்' உதவியுடன் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கல்

பரந்தன்,மே29

கிளிநொச்சி மாவட்டப் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினர் 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மூன்று கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் முகமாகச் சுயதொழில் கடனுதவிகளை வழங்கியுள்ளனர்.

அக்கராயன், வட்டக்கச்சி, கோரக்கன் கட்டு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கே கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அக்கராயன் பிரதேச இணைப்பாளர் திருமதி உதயசூரியன் சூரியகலா தலைமையில் 9 பயனாளிகளுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் -

வட்டக்கச்சிப் பிரதேச இணைப்பாளர் தலைமையில் 3 பயனாளிகளுக்கு 30 ஆயிரம் ரூபாவும் -

கோரக்கன்கட்டு கிராமத்தில் கண்டாவளைப் பிரதேச இணைப்பாளர் பயனாளி ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபாவும் - வழங்கப்பட்டன.

விவசாயம், கோழி வளர்ப்பு, தையல் போன்ற சுயதொழில்களை மேற்கொள்வதற்காகவே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (352)

## பஸ் கட்டணம் வன்னியில் உயரும்

வட்டக்கச்சி,மே29

தற்போதைய எரிபொருள் விலை ஏற்றம் காரணமாகத் தமிழீழ போக்குவரவுக் கழகத்தின் பேருந்துப் பயணக் கட்டணங்களை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் இருபது வீதத்தால் அதிகரிக்கப்படுகிறது என்று தமிழீழ போக்குவரவுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். ஆகக் குறைந்த கட்டணம் ஐந்து ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. (405)

## கோயில்வயலில் மருத்துவ முகாம்

கிளிநொச்சி கோயில்வயல் கிராம மக்களுக்கான மருத்துவ சேவை அண்மையில் தமிழீழ சுகாதார சேவையினரால் கோயில்வயல் பொதுநோக்கு மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இந்த மருத்துவ முகாமில் 80 பேருக்கு பொது மருத்துவ சிகிச்சையும் 100 பேருக்கு பற்சிகிச்சையும் 40 பேருக்கு சுதேச மருத்துவ சிகிச்சையும் வழங்கப்பட்டன.

பாடசாலை மாணவர்கள் கிராம மக்கள் எனப் பெருமளவானோர் இந்த மருத்துவ முகாமில் கலந்துகொண்டனர்.

கோயில்வயல் வைத்தியசாலை வசதிகள் எதுவும் இல்லாத கிராமம் என்பது குறிப்பிடத்தக்கது. (405)

## கிளிநொச்சி பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி

வட்டக்கச்சி,மே29

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகள் அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வுக்கு கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களின் 'பான்ட்' வாத்திய இசையுடன் விருந்தினர் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

விழா மண்டபத்தில் மங்கள விளக்கை கிளிநொச்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.தனராஜா ஏற்றி வைத்தார்.

ஒலிம்பிக் சுடரை தமிழீழ வைப்பகத்தின் ஆளுகை முகாமையாளர் பாலகிருஷ்ணன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து அரச அதிபரின் ஆசியுரையுடன் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. முடிவில் பரிசில் வழங்கல் இடம்பெற்றது. (405)

# கால்நடைகளை பட்டிகளில் விடுமாறு மக்களுக்கு அறிவுறுத்து

கிளிநொச்சி,மே29

பரந்தன் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் கால்நடைகளை இரவு நேரங்களில் பட்டிகளில் அடைத்து 2006 சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

கால்நடைகளை இரவில் பட்டிகளில் அடைக்காது வெளியில் விடுகின்றமையால் அவை வயல் நிலங்களில் புகுந்து சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

# சேற்றுக்கண்டி கிராமத்தில் பொழுதுபோக்கு மையம்

வட்டக்கச்சி,மே29

முரசுமோட்டை சேற்றுக்கண்டி கிராமத்தில் சிறுவர் பொழுதுபோக்கு மையக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் திருமதி கே.தேவிகா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.சிதம்பரநாதன், ஊரக மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் த.நந்தகுமார் ஆகியோர் கட்டடத்திற்கான அடிக்கல்லை நட்டுவைத்தனர்.

இக்கட்டடம் அமைப்பதற்கான நிதியுதவியை ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நலன் திட்ட நிறுவனம் வழங்கியுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் அனுசரணையுடன் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தினரால் சேற்றுக்கண்டி கிராமத்தில் வாழும் சிறுவர்களின் எதிர் காலத்தை கருத்தில் கொண்டு இப்பொழுதுபோக்கு மையம் அமைக்கப்படவுள்ளது. (405)

## சைக்கிள் திருத்தும் பயிற்சி மன்னாரில்

பரந்தன், மே29

மன்னார் மாவட்ட துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கத்தினரால் இளைஞர்களுக்கு சைக்கிள் திருத்தும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்வு அண்மையில் சங்கப்பணிமனையில் சங்கத் தலைவர் அருட் தந்தை அ.சேவியர் குரூஸ் தலைமையில் நடைபெற்றது.

பயிற்சிநெறியை மன்னார் நகரப் பிரதேச செயலர் திருமதி ஸ்ரனி டீமேல் ஆரம்பித்து வைத்தார். (352)



கிளிநொச்சி மாவட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. போட்டி நிகழ்வில் விருந்தினர்கள் 'பான்ட்' வாத்திய அணி வகுப்புடன் அழைத்துவரப்படுவதையும் விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் சுடர் ஏந்தி மைதானத்தை வலம் வருவதையும் நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

**இணுவில் அருள்மிகு**
**ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோயில்**
**தீர்த்த மஹோற்சவ உற்சவம்**

**காலம் :-** விய ஸ்ரீ வைகாசி
தமிழ் 16, 30/05/2006
**நேரம் :-** காலை 10 மணிக்கு தீர்த்த
உற்சவம்
(விஷேட அம்சம் :-
நாதஸ்வர தவில் கச்சேரி இடம்பெறும்)

***காசி மகா தீர்த்தம் ஊற்றப்படும்.**

**- தீர்த்த உபயகாரர்கள்.**

(50582)(23-39-17)




உங்கள் விமானப் பயணங்களைத் தனித்துவமாகக் கையாள்கின்றோம்

1. உள்நாட்டு, வெளிநாட்டு விமான ரிக்கெற்றுக்களுக்கும் அதன் முன்கூட்டிய பதிவுகளுக்கும்
2. விசா சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
3. விமானப் பயணிகளின் காப்புறுதி விவரங்கள்
4. ஐரோப்பிய நாடுகளிடையே புகையிரதங்களில் பயணிப்பதற்கான புகையிரதப் பயணச்சீட்டுக்கள்
5. விமான நிலையத்தில் போக்குவரத்து வசதிகள்
6. பயணிகள் காசோலை பற்றிய விவரங்கள்
7. உள்நாட்டு, வெளிநாட்டு, உல்லாசப் பயண ஏற்பாடுகள்

அனைத்துக்கும் உடனே நாடுங்கள்

**AITKEN SPENCE OVERSEAS TRAVEL SERVICES(PVT)LTD**
**56/15, STANLEY ROAD, JAFFNA**
T.P :- 021 222 3771
Mobile :- 0777 915824 E.mail aitken spence jf@slt net.lk

(23-39-17)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 12 - 08 - 1922 | 29 - 05 - 2005 |

**அமரர் சேனாதிராசா மனோன்மணி**
*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*

வாழ்வினிற் புதிய பாதை செழித்திட நுணையாய் வந்தாய்
தூயதோர் யுகத்தில் உம்மைத் தாயெனக் கண்டோம் - அம்மா!
நீயெமக்கீந்த அன்பை நினைத்திட நெஞ்சம் -விம்மும்
கடமைகள் முடித்துப்போனாய் நினைவிலே -வாழ்கின்றோம் அம்மா!

உம் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும்...

278, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(50577)(26-39)

## 31ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
தம்பிஐயா சிவபுண்ணியம்
எமது சக ஆசிரிய பயிலுனர் நண்பன்
**சி.சிவகரன்**
அவர்களின் அன்புத் தந்தை
அமரர் **தம்பிஐயா சிவபுண்ணியம்**
அவர்களின் மறைவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் வருட ஆசிரிய பயிலுனர்கள்
மட்டக்களப்பு தேசிய
கல்வியியற் கல்லூரி.

(50554)(39-17)

## நூல் இன்று கையளிப்பு

தென்மராட்சி,மே29

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தினால் சாவகச்சேரி பிரதேச சபை, சரசாலை பொது நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.

இன்று முற்பகல் 10 மணிக்கு சேவாச்சிரம முதல்வர் சித்ரூப்பானந்தா சுவாமிகள் பிரதேசசபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரனிடம் கையளிக்கவுள்ளார். (117)

## ஆங்கில வகுப்புகள்

தென்மராட்சி,மே29

தென்மராட்சி கல்வி வலயத்தினர் பண்டிதர் வேலுப்பிள்ளை நிதியஅனுசரணையுடன் நடத்தும் ஆரம்பப்பிரிவு ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறுகின்றன என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (117)

## வடமராட்சியில் மின்வெட்டு அரைமணி நேரம் அமுல்

வடமராட்சி, மே29

வடமராட்சிப் பிரதேசத்தில் மின்வெட்டு அரை மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

முன்னர் இரவு வேளைகளில் ஒரு மணி நேர மின் வெட்டு இருந்து வந்தது. தற்போது தினமும் மாலை 6 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் அரை மணி நேரம் மின் வெட்டு இருந்து வருகிறது.

மின்வெட்டு அரை மணி நேரமாகக் குறைத்தமையால் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சைக்குத் தயார் செய்ய வாய்ப்புக் கிடைத்துள்ளது. (173)

## சமுர்த்தி நிவாரணத்தில் முறைகேடு என மகஜர்

நல்லூர்,மே29

நாயன்மார்கட்டு பகுதியில் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதில் பலமுறைகேடுகள் உள்ளதாகவும் வறியமக்களுக்கு மேற்படி நிவாரண உதவிகள் கிடைப்பதில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக நாயன்மார்கட்டு பாரதி மன்றசனசமூகநிலையம் இப்பகுதி மக்களின் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர், கோப்பாய் பிரதேச செயலர், மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கும் நடிவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (111)

## மாகாண மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டிகள் வவுனியாவில் அடுத்தமாதம்

பாடசாலைஉடற்பயிற்சி அணிகளுக்கிடையிலான மாகாணமட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் அடுத்த மாதம் 23 ஆம் திகதி வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இருந்து ஆண்/பெண் பிரிவுகளில் தலா இரு அணிகள் பங்கு பற்றவுள்ளன.

யாழ்.மாவட்டத்தை சேர்ந்த பாடசாலை உடற்பயிற்சி அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி முதலாம் இடத்தினையும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

பெண்கள் பிரிவில் மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலாம் இடத்தினையும் சங்கானை சிவப் பிரகாச வித்தியா லயம் இரண்டாம் இடத்தினையும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன. முதல் இரு இடங்களை பெற்ற அணிகள் மாகாண [illegible] பங்கு பற்றும் தகுதியை பெற்றுள்ளன. (16)

## போக்குவரத்துச் சபையின் வருமானத்தில் வீழ்ச்சி

குடாநாட்டில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டதால் இ.போ.ச. டிப்போக்களின் வருமானம் பெருவீழ்ச்சியடைந்துள்ளது.

மக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் இ.போ.ச. பஸ் சேவைகள் யாவும் மிக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெற்று வருகின்றன. ஆனாலும், பயணிகள் குறைந்துள்ளமையால் வருமானம் குறைந்துள்ளது.

குடாநாட்டிலுள்ள யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்களின் வருமானம் குறைந்துள்ளதால் ஊழியர்களுக்கு உரியகாலத்தில் சம்பளம் வழங்குவதிலும் சிரமங்கள் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (173)

## 1st Year Remembrance



| | |
|---|---|
| 17 . 04 . 1973 | 29 . 05 . 2005 |

**Sadakopan Sanjeevan**


Twelve sad months have swiftly flown
Since you reached your heavenly home
The love and care you always gave
Is gratefully remembered day by day

Sadly missed by your loving wife Dilakshi,
daughters Shamintha, Sanjana
and loved ones

'Bethel'
Manipay Rd., Uduvil.

(50451)(23-17-39)

## கண்ணீர்க் காணிக்கை



24.05.2006 இல் இறைவனடி சேர்ந்த கொக்குவில்
மனோன்மணி சனசமூக நிலைய போஷகர்
**அமரர் கந்தையா இராமநாதன் (J.P.)**
*(ஓய்வுபெற்ற சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம்)*

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.

மனோன்மணி சனசமூக நிலையமும்
பாலர் பாடசாலையும்
விளையாட்டுக் கழகமும்.

(50606) (39-17)

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 12 * 02 * 1925 | 10 * 06 * 1986 |

**அமரர் தம்பு கதிரவேலு**
*(ஓய்வுபெற்ற அதிபர், கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை)*
திதி: திருதியை 29.05.2006

அன்பும் பாசமும் ஊட்டி வளர்த்தீர்கள் ஐயா!
பண்புக்கோர் இலக்கணமாய் இருந்தீர்கள் ஐயா!
குடும்பத்தில் குலவிளக்காய் ஒளிர்ந்தீர்கள் ஐயா!
உற்ற துணையாய் உடன் இருந்து வளர்த்தீர்கள் ஐயா!
இனிய நினைவுகள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இருபது ஆனாலும்
உங்கள் அன்பொளி மட்டும் அணையவில்லை.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திருவத்தம்பை, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

தங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(50512) (39-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிய நிதி ஒதுக்கீடு இன்மையால் குடிதண்ணீர் வழங்கலில் நெருக்கடி

## அச்சுவேலி மக்கள் விசனம் தெரிவிப்பு

அச்சுவேலி, மே29

அச்சுவேலி பகுதியில் நிறுவப்பட்டுள்ள குடிதண்ணீர்த் தொட்டிகள் எல்லாவற்றுக்கும் நீர் நிரப்புவதற்கு உரிய ஏற்பாடு செய்யப்படவில்லை என பொதுமீக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் அச்சுவேலியில் குடிதண்ணீர் வழங்குவதற்குவதென வலி.கிழக்கு பிரதேச சபையினரால் 32 தொட்டிகள் நிர்மாணிக்கப்பட்டன.

இந்தத் தொட்டிகளுக்கு மஹிந்த சிந்தனை நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிலாவரையில் தோண்டப்படும் குழாய்க்கிணறு மூலம் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் - குழாய்களை இணைப்புச் செய்யும் வேலைகளும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

நிறுவப்பட்டுள்ள அனைத்துத் தொட்டிகளுக்கும் குழாய்களை இணைப்பு செய்வதற்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாமையே குடிதண்ணீர் வழங்கலில் நெருக்கடி ஏற்படக் காரணம் என்றும் - கூறப்பட்டது.

பல வருடங்களின் பின்னர் தொட்டிகளின் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட ஏற்பாடு செய்யப்படுகின்றது என எதிர்பார்த்திருந்த பொதுமக்கள் இதனால் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், 32 தொட்டிகளில் நிறுவப்பட்டுள்ள பத்து தொட்டிகளுக்கு மட்டுமே குடிதண்ணீர் வழங்கப்படும் எனக் கூறப்படுகின்றது. (11)

## நூலக வாரம் அனுஷ்டிப்பு

நல்லூர்,மே29

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையத்தினர் தமது நூலகத்திற்கென நூல்களைச் சேகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அடுத்த மாதம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நூல்கள் சேகரிக்கவென நூலகவாரம் அனுஷ்டிக்கவுள்ளதாகவும் -

பொது மக்கள் முடிந்தவரை நூல்களை தமது நன்கொடையாக வழங்கி உதவவேண்டும் என்றும் - வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (111)

## புகைப்பொருள் எதிர்ப்பு தின நிகழ்வுகள்

சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தை ஒட்டி வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் நிகழ்வுகள் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சித்தன்கேணியிலுள்ள சம்மேள அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

சம்மேளனத் தலைவர் சி.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக மானிப்பாய் சுகதார வைத்திய அதிகாரி எஸ்.சிவ கணேஸ், வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் ஆகியோர் கலந்துகொள்வர். (202)

## கடற்படையினரின் கெடுபிடிகளை அடுத்து பொன்னாலை செல்வோர் எண்ணிக்கை வீழ்ச்சி

வலி.மேற்கு,மே29

பொன்னாலையில் நிலைகொண்டுள்ள கடற்படையினரின் கெடுபிடிகளினை அடுத்து பிரசித்தி பெற்ற பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.

பொன்னாலை ஸ்ரீவரதராசப் பெருமாள் ஆலயத்துக்கு குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஞாயிற்றுக்கிழமைகளில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் சென்று வந்தனர்.

பொன்னாலையில் நிலைகொண்டுள்ள கடற்படையினரின் கடும் கெடுபிடிகளினாலும் விசாரணைகளினாலும் தற்போது ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.

வாகனங்களில் செல்லும் பக்தர்களை ஆலயத்தில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் முன்பாக வாகனங்களை நிறுத்திவிட்டு நடந்துசெல்லுமாறு கடற்படையினர் பணித்துள்ளனர்.

கடற்படையினரின் இந்த நடவடிக்கையினால் வயோதிபர்களும் குழந்தைகளுடன் செல்லும் பெண்களும் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். (175)

## தீவுப் பகுதியில் பரவலாக கால்நடைகளை கடித்துக்குதறும் கட்டாக்காலி நாய்கள்

ஊர்காவற்றுறை, மே 29

தீவுப் பகுதிகளில் பல்வேறு இடங்களிலும் கட்டாக்காலி நாய்களால் கால்நடைகள் வேட்டையாடப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளிலேயே மேற்படி சம்பவங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன. குறிப்பாக, இடம்பெயர்ந்த மக்கள் விட்டுச் சென்ற வளர்ப்பு நாய்கள் உணவுதேடி அயல் கிராமங்களில் புகுந்து அங்குள்ள கால்நடைகளை பிடித்து உட்கொள்வதை காணக்கூடியதாகவுள்ளது.

இரவு வேளைகளிலேயே கால்நடைகள் கட்டாக்காலி நாய்களால் அதிகம் வேட்டையாடப்படுகின்றன.

இரவுவேளைகளில் கால்நடைகளின் அலறல் சத்தம் கேட்பதாகவும் -

பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வர அச்சப்படுவதால் அவற்றை காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் - தீவுப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (16)

## நெடுந்தீவில் சுயதொழில் முயற்சிக்கு கொடுப்பனவு

நெடுந்தீவு, மே 29

வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் நெடுந்தீவில் மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளைப் பெறும் குடும்பங்களுக்கு சுய தொழிலுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்கவுள்ளது.

மேற்படி உதவி அரச அதிபர் பிரிவில் மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும் பத்துக் குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு தலா ரூபா 10 ஆயிரம் வீதம் சுயதொழில் நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நிதி நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (111)

## சமுர்த்தி நிவாரணம் வழங்கலில் கூட்டுறவு சங்கங்களிடையில் வேறுபாடு

தென்மராட்சி,மே29

தென்மராட்சி பிரதேச பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சமுர்த்தி நிவாரண விநியோகத்தின்போது வெவ்வேறு பொருள்கள் வழங்கப்பட்டமை குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

சமுர்த்தி நிவாரணமாக மா வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அதற்குப் பதிலாக பருப்பு வழங்கப்பட்டதாகவும்

இது தொடர்பாக உரிய இடங்களில் அறிவிக்கப்பட்டும் பயன் கிடைக்கவில்லையெனவும் மக்கள் தெரிவித்தனர். (117)

## வருடாந்த பெருந்திருவிழா

காரைநகர்,மே29

காரைநகர் பாலாவோடை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (73)

# இந்தோனேஷிய பூகம்பத்தில் உயிர் தப்பியவர்களைத் தேடும் பணி தீவிரம்

## 2 லட்சம் பேர் வீடுகளை விட்டு ஓட்டம்

ஜகார்த்தா,மே29

இந்தோனேஷிய ஜாவா தீவினை தாக்கியுள்ள நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்டு உயிருடன் இருக்கக்கூடியவர்களைத் தேடும் பணி மிகவேமாக முடுக்கிவிடப்பட்டுள்ளது.



இந்த நிலநடுக்கத்தினால் 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

யோக்யகர்தா என்ற நகரின் தென்பகுதியில் இந்தப் பூகம்பத்தினால் கட்டடங்கள் தரைமட்டமானதில் கொல்லப்பட்டவர்களைத் தவிர்த்து 10 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

பாரிய நிலநடுக்கத்துக்குப் பிறகு சிறுசிறு பின் விளைவு, தாங்கங்கள் ஏற்பட்டதால் மக்கள் பெரும் அச்சத்துக்குள்ளாகியுள்ளனர். வீடுகளை இழந்தவர்கள் திறந்தவெளிகளில் இரவைக் கழித்தார்கள். பூகம்பம் தாக்கிய பிரதேசம், மக்கள் செறிவாக வாழ்ந்த இடம் என்றும் சுமார் 2 லட்சம் பேர் பயத்தினால் வீடுகளை விட்டு தூர இடங்களுக்கு ஓடிவிட்ட தாக இந்தோனேஷிய செஞ்சிலு வைச் சங்கம் அறிவித்துள்ளது.

பூகம்பத்தில் 3 ஆயிரத்து 340 பேர் கொல்லப்பட்டுவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மருத்துவமனைகளில் காயமடைந்தவர்களைக் கவனிப்பதில் பெரும் நெருக்கடிக்களை மருத்துவர்கள் எதிர்கொண்டனர்.

யோக்யகர்தா நகருக்குத் தெற்கிலுள்ள பான்டுல் என்ற நகரமே பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. அங்கு 2 ஆயிரம் பேர் பலியானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### எரிமலை சீறுகிறது

இதற்கிடையில் அப்பகுதியில் அமைந்துள்ள மெராபி எரிமலையும் தீப்பிழம்பைக் கக்கி வருகிறது. சனிக்கிழமை அந்த எரிமலையிலிருந்து சாம்பலும் புகையும் தொடர்ந்து வெளியேறின. பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரம் இதனால் மேலும் அதிகரித்துள்ளது. எரிமலை சீற்றத்துக்கும் பூகம்பத்துக்கும் தொடர்பு இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

இந்தோனேஷியாவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது வழமையாகிவிட் டது. ஆனால், தற்போதைய பாதிப்பு கடுமையானது என இயற்கைச் சீற்றப் பேரழிவுத் தடுப்புப் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் புரூக் வெய்ஸ்மன் ராஸ் தெரிவித்தார். (ப)

### சமீபகால நிலநடுக்கங்கள்

2005 காஷ்மீர் - முஸபராத் - 73 ஆயிரம் பேர் பலி.

2004 ஆசிய சுனாமி - கடலுக்கடியில் பூகம்பம் - 200 ஆயிரம் பேர் பலி.

2003 பாம் -ஈரான் - 26 271 பேர் பலி.

2001 குஜராத் - இந்தியா 20 ஆயிரம் பேர் பலி.

1999 இஸ்மித் - இஸ்தான்புல் - துருக்கி 17 ஆயிரம் பேர் பலி.

1990 கிலான் - ஈரான் 40 ஆயிரம் பேர் வரை பலி.

1976 தாங்ஷான் - சீனா 255000 பேர் பலி. (ப)

## புதிய நிபந்தனை விதித்தால் ஒப்பந்தம் முறியுமாம்

வாஷிங்ரன், மே 29

இந்திய - அமெரிக்க அணுவிசை திட்ட உடன்பாடு தொடர்பாக அமெரிக்க எம்.பி.கள் தெரிவிக்கும் கருத்துக்களைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ள அமெரிக்கா தயாராக இருக்கிறது. ஆனால் இந்தக் கட்டத்தில் அந்த உடன்பாட்டில் எவ்வித நிபந்தனைகளையும் புதிதாகச் சேர்க்க முடியாது. அவ்வாறு திணித்தால்அந்த ஒப்பந்தமே முறிந்துவிடும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை உதவிச் செயலர் ரிச்சாட் பௌசர் கூறியிருக்கிறார்.

இந்தியா - அமெரிக்கா இடையிலான அணுசக்தி ஒத்துழைப்பு உடன்பாட்டுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக வந்த செய்தியையும் அவர் மறுத்தார்.

அவர் பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:-

இந்திய - அமெரிக்க அணுசக்தி உடன்பாடு தொடபார்க அமெரிக்க எம்.பிக்களுடன் தீவிர விவாதத்தில் புஷ் நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

பல்வேறு விதமான கருத்துகள் கூறப்படுகிறன. அந்த உடன்பாட்டைப் பாராட்டுவோரும் உள்ளனர். விமர்சிப்போரும் உள்ளனர். அவை அனைத்தையும் அரசு கேட்டுக்கொள்கிறது. - என்றார் ரிச்சர்ட் பௌசர்.

# காஷ்மீரில் தொடரும் வன்செயல்கள் குறித்து இந்திய, பாகிஸ்தானிய உள்துறை செயலர்கள் பேச்சு

காஷ்மீரில் தொடர்ந்து நடைபெற்று வரும் பயங்கரவாத செயல்கள் குறித்து இந்தியா, பாகிஸ்தான் உள்துறை செயலர்கள் இஸ்லாமாபாத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

இந்திய உள்துறைச் செயலர் வி.கே. துக்கால் தலைமையில் 9 பேர் அடங்கிய குழு, பாகிஸ்தான் உள்துறைச் செயலர் சையது கமால் ஷாவுடன் நாளை செவ்வாய்க்கிழமை தொடங்கி இரு நாள் பேச்சுவார்த்தை நடத்துகிறது.

பயங்கரவாதம் தொடர்பாக இந்தியாவின் கவலைகளை இந்தக் குழு பாகிஸ்தானிடம் தெரிவிக்கும். பயங்கரவாதிகளின் செயற்பாடுகள், பாகிஸ்தானில் அவர்களுக்கு உள்ள பயங்கரவாத கட்டமைப்பு மற்றும் அந்நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் தொடர்பான விவரங்களையும் இந்தக் குழு தெரிவிக்கும் என துக்கால் டில்லியில் கூறினார்.

தவறுதலாக எல்லையைக் கடந்து பிடிபட்டு இரு நாடுகளிலும் கைதிகளாக உள்ள அப்பாவிகளைப் பரிமாறிக்கொள்வது தொடர்பான பிரச்சினை குறித்தும் இந்தப் பேச்சுக்களின்போது விவாதிக்கப்படும் என சையது ஷா இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மும்பை குண்டு வெடிப்பில் முக்கிய குற்றவாளியும் குண்டர் கோஷ்டி தலைவருமான தாவூத் இப்ரகிம் போன்ற தேடப்படும் கைதிகளை நாட்டைவிட்டு வெளியேற்றுமாறு இந்தச் சந்திப்பின்போது இந்தியா வலியுறுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாசாலையின் மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் திருமதி ச.சிவகுமார், நலன் விரும்பிகளான வை.நாகலிங்கம், க.கணேஸ் ஆகியோரும் காணப்படுகின்றனர். (படம்: சங்கானைச் செய்தியாளர்)

# வன்செயல்களில் சிக்கி இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு

வலி.மேற்கு,மே29

கடந்தகால வன்செயலின்போது இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையினைப் பெற்றுக்கொள்ளாத வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களை உடன் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் சீ.ஏ.மோகன்றாஸ் கேட்டுள்ளார்.

பின்வரும் பெயர், விவரங்களை உடையவர்களை உடனடியாகப் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு இழப்பீட்டுத் தொகையினைப் பெற்றுக் கொள்ளுமாறும் பிரதேச செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

இழப்பீட்டுக் கொடுப்பனவைப் பெறுபவர்களின் பெயர், கிராம அலுவலர் பிரிவு இலக்கம் (இறந்தவர்களின் பெயர் அடைப்புக்குறிக்குள்) என்பன வருமாறு:-

கணபதி சின்னத்தம்பி - ஜே/174, சுழிபுரம் கிழக்கு (கணபதி செல்வி), முருகேசு கோணேஸ்வரன் - ஜே/164, அராலி வடக்கு (முருகேசு ஜெகதீசன்), தங்கராசா உலகநாயகி - ஜே/169, தொல்புரம் மேற்கு (தங்கராசா தற்சுதன்), மாணிக்கம் சிவராசா - ஜே/169, தொல்புரம் மேற்கு (மாணிக்கம் சிவசிதம்பரம்), இளையதம்பி கந்தசாமி - - ஜே/161, அராலி மேற்கு (கந்தசாமி சாந்தி), கந்தன் வைரவன் - ஜே/169, தொல்புரம் மேற்கு (கந்தன் வியாழி), தங்கவேல் தவமணி தேவி - ஜே/173, சுழிபுரம் மத்தி (தங்கவேல் தவக்குமார்), செல்லையா கிருஷ்ணபிள்ளை - ஜே/171, பொன்னாலை (கிருஷ்ணபிள்ளை சுமதி), முருகன் தவராசா - ஜே/174, சுழிபுரம் கிழக்கு, (தவராசா ரசிதா), கனகரத்தினம் கிருபாகரன் - ஜே/169, தொல்புரம் மேற்கு (கனகரத்தினம் சுபாகரன்), கனகரத்தினம் கிருபாகரன் - ஜே/169, தொல்புரம் மேற்கு ( கனகரத்தினம் வசீகரன்), கனகரத்தினம் கிருபாகரன் - ஜே/169, தொல்புரம் மேற்கு (கனகரத்தினம் சரஸ்வதி). (175)

## சின்னக்கடை சந்தையில் மரக்கறி, மீன் விலை உயர்வு

மண்டைதீவு,மே29

யாழ். நகரப் பகுதியில் குறிப்பாக சின்னக்கடை சந்தையில் அண்மைய நாள்களாக மரக்கறிகளின் விலை வழமையைவிட உயர்வாக இருப்பதாகப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அறுபது ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட தக்காளி கிலோ 160 ரூபாவரை அதிகரித்துக் காணப்படுகிறது. முருங்கைக்காய் ரூபா 300 முதல் 320 ரூபா வரை விற்கப்படுகிறது. இதேநேரத்தில் கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் விலை ரூபா 100 வரை அதிகரித்துள்ளது.

சின்னவெங்காயம், பயற்றை, பாவற்காய், போஞ்சி, மரவள்ளி, கரட், கறிமிளகாய் என்பனவும் தலா அறுபது ரூபாவிற்கு மேல் போகின்றது.

இதேவேளை - இந்தச் சந்தையில் மீன் வகைகளின் விலையும் அதிகரித்துள்ளது. இறால், கணவாய், சின்னநண்டு என்பன கிலோ 300 முதல் 320 வரை விற்பனையாகிறது.

ரூபா 20 முதல் 40 வரை விற்கப்பட்ட சூடை மீன் 80 ரூபாவிற்கு விற்கப்படுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

வெளியிடங்களில் இருந்து மீன் எடுத்து வருவது குறைவாக இருப்பதும் மீன்பிடி நேரம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதும் மீனவர்களிடையே ஏற்பட்டுள்ள தொழில் தயக்கமும் இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. (88)

## யாழ். ப.நோ.கூ. சங்க பணியாளர்களின் கொடுப்பனவு அதிகரிப்பு

அரியாலை,மே29


யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பணியாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை அதிகரித்துள்ளது.

இந்தச் சம்பள அதிகரிப்பு இந்த மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பில் சங்கப் பணியாளர்களுக்கு ஆயிரம் ரூபா மட்டுமே அதிகரித்து வழங்கப்பட்டிருந்தது.

மிகுதி ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படாமல் இருந்தது.

இந்த நிலையில் தற்போது 750 ரூபா இந்த மாத சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது. மிகுதியாக இருக்கும் 750 ரூபாவினை விரைவில் வழங்குவதற்கு சங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (117)



மாதகல் சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திருமதி செபமாலைநாயகி தேவராசா கொடியேற்றுவதையும் -

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சர்வதேச 'கெயர்' நிறுவன யாழ். மாவட்ட மனிதநேய உதவித் திட்டப் பணிப்பாளர் ஆ.கருணாகரன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மாதகல் பங்குத் தந்தை அருட்திரு ஏ.சி.கிறிஸ்தோப்பர் அடிகளார் ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)

## ஆலய மண்டபத்தில் இருந்த குதிரை வாகனம் திருட்டு; மட்டுவிலில் சம்பவம்

தென்மராட்சி,மே29

ஆலய மண்டபத்தினுள் வைக்கப்பட்டிருந்த குதிரை வாகனம் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

அண்மையில் அடியார் ஒருவரால் ஆலயத்திற்கு வழங்கப்பட்ட ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வெள்ளைக் குதிரை வாகனமே இவ்வாறு திருட்டுப் போயுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

மட்டுவில் மருதடிப் பிள்ளையார் ஆலய குதிரை வாகனமே கடந்த 23 ஆம் திகதி இரவு திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருட்டு தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (117)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே29

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## பாலர்களின் விளையாட்டு விழா

வலி.மேற்கு,மே29

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் நடத்தும் பாலர் வகுப்பு மாணவரின் 41ஆவது ஆண்டு விளையாட்டு விழா சித்தன்கேணி பிள்ளையார் ஆலய வீதியில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருமதி கோமளவல்லி தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்புவிருந்தினர்களாகவும் கௌரவவிருந்தினர்களாகவும் அரச அலுவலர்களும் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (175)


சீட்டிழுப்பு இல. 1713

27.05.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

20 28 30 54 (01)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 301096953 இலிருந்து 301111575

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 88,08,200/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 88,08,200/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 21 | 5,000/- | 1,05,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 393 | 1,000/- | 3,93,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,229 | 500/- | 6,14,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 18,900 | 40/- | 7,56,000/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 17,910 | 20/- | 3,58,200/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,68,612 | 10/- | 26,86,120/- |
| மொத்தம் | | | 69,12,820/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,07,072 | | 75,12,820/- |

தொடர் இல. 201192457 க்கு மேற்பட்ட சாதா நிற டிக்கெட்டுக்கள் 2006 மே மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 95,25,600/-

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிள் அடங்கிய பரிசு முதல் வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| பொலன்னறுவை | 301104540-8-27 |
| கொழும்பு | 301106493-8-57 |
| மாத்தறை | 301099618-4-19 |
| கொழும்பு | 301097024-6-92 |
| ஹம்பாந்தோட்டை | 301098133-8-89 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து இராசதுரை

*(சின்னராசா)*

கருகம்பானை, கீரிமலையைப் பிறப்பிடமாகவும் நகுலேஸ்வரா வீதி, அளவெட்டி வடக்கு, அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து இராசதுரை நேற்று (28.05.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி வடக்கு, கேணிப்பட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நகுலேஸ்வரா வீதி,**
**அளவெட்டி வடக்கு,**
**அளவெட்டி.**

தகவல்:
**இ.பாலகுமார் (மகன்).**
(50633) (24)(14-17)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 - 09 - 1964



உதிர்வு 21 - 05 - 2000

### திருமதி கிருஷ்ணானந்தன் இந்திரா

திதி: திருதியை 30.05.2006

எம்மை ஆளாக்கிய தெய்வமே !
இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
இறவாத அன்பே!
வணங்குகின்றோம் - எம்மை
வண்ணமுறக் காத்திடுவீர்.

**மீசாலை மேற்கு,**
**மீசாலை.**

*பிரிவால் துயருறும்:*
**கணவர், பிள்ளைகள்.**

(50634) (18-24-14-17)

உ
ஓம் விராட்விஸ்வப் பிரம்மனே நமஹ

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



15-04-2006 சனிக்கிழமை இறைப்தம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### திருமதி சிவசுப்பிரமணியம் புஸ்பலீலாவதி

இன்று (29.05.2006) திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**சி.கமலேஸ்வரன்**
**சோர்ணவடலி பிள்ளையார் கோயிலடி,**
**கோக்குவில் மேற்கு, கோக்குவில்.**

**- குடும்பத்தினர்.**

(50638) (24-14-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளைத் தடைசெய்வதால் பிரச்சினைக்குத் தீர்வு வராது

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, மே 29

''தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்வதன்மூலம் அதுவோ அல்லது இலங்கை அரசோ எந்த விதமான நன்மைகளையும் அடைந்துவிட முடியாது. அதைவிட்டுவிட்டு இதுவிடயத்தில் வேறு உபாயமார்க்கத்தைப் பின்பற்றுவது நல்லது.''

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றில் இடம்பெற்ற வடக்கு - கிழக்கு நிலைமைகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டிலே யுத்தம் ஏற்படக்கூடிய ஒரு நிலைமை தோன்றியுள்ள இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்யவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியம் இது தொடர்பாக பரிசீலனை செய்துவருவதாகவும் கூறப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்வது பற்றி பல வருடங்களுக்கு முன்னர் கருத்துத் திரட்டப்பட்டது. புலிகளைத் தடை செய்வது நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. அமெரிக்கா புலிகளைத் தடை செய்கிறது என்பதற்காக நாமும் இங்கு தடை செய்யமுயற்சிப்பது ஒரு நல்ல முடிவாக அமையாது என நான் அப்போது கூறினேன்.

புலிகளை வேறுகோணத்தில் அணுகலாம். வேறுவிதமாக அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம் என நாம் அப்போது இலங்கை அரசிற்குச் சொன்னோம்.

இப்போது ஐரோப்பிய ஒன்றியம் இத்தடை குறித்துப் பரிசீலனைசெய்து வருகின்றது. ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடைசெய்வதைவிட வேறு உபாயங்களைப் பயன்படுத்துவதுதான் சரியான ஒன்றாக அமையும்.

இதுதவிர இப்போதைய நாட்டுநிலைமையை எடுத்துக்கொண்டால் அது மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழர்கள் மாத்திரமன்றி முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மூதூர் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலின்போது பல முஸ்லிம்கள் உயிரிழந்தனர். இது தவிர இன்னும் பல இடங்களில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ள னர்.

இதிலிருந்து ஒரு விடயம் தெளிவாகிறது. பிரச்சினை என்று வரும்போது முஸ்லிம்களும் தான் பாதிக்கப்படுகின்றனர். இப்பிரச்சினையில் தமிழர்களுக்குத் தீர்வு வரும்போது முஸ்லிம்களுக்கும் தீர்வு வரவேண்டும் என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

எம்மை வியாழக்கிழமை சந்தித்த நோர்வேயின் சமாதானத் தூதுவர் ஹென்ஸன் போவரிடம் இதைத் தெளிவுபடுத்தினோம்.

நாட்டின் நிலைமை காரணமாக மூதூர் பகுதியில் தமிழர்கள் மாத்திரமன்றி முஸ்லிம்களும் இடம்பெயர்கின்றனர். இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு உணவு வசதிகள் ஏதும் செய்துகொடுக்கப்படவுமில்லை. இவ்வசதிகளை உடனடியாகச் செய்துகொடுக்க அரசு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

- எனக் கூறினார். (ம-க)

# புத்தரின் புனித நினைவுச் சின்னங்களை இலங்கைக்கு அனுப்ப பீகார் அரசு மறுப்பு

## கொழும்பின் கோரிக்கை இந்தியாவால் நிராகரிப்பு

பாட்னா, மே 29

இலங்கையில் நடைபெறும் கண்காட்சி ஒன்றுக்காக புத்தரின் நினைவுச் சின்னங்களை அனுப்பிவைக்குமாறு இலங்கை அரசு விடுத்திருந்த கோரிக்கையை, இந்தியாவின் பீகார் மாநில அரசு நேற்று நிராகரித்துவிட்டது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது ,

புத்த மதத்தைத் தோற்றுவித்த கௌதம புத்தர் பிறந்த இடம் தற்போது பீகார் மாநிலத்திலுள்ளது. அவர் பயன்படுத்திய பொருள்கள் மற்றும் அவருடைய அஸ்தி உட்பட புத்தருடைய நினைவுச் சின்னங்கள் கடந்த 1950 ஆம் ஆண்டுகளில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் வைசாலியில் கண்டெடுக்கப்பட்டன. புனிதப் பொருட்களாகக் கருதப்படும் அவை தற்போது பாட்னா அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கொழும்பில் புத்தரின் நினைவுச் சின்னங்கள் குறித்த பொதுக்கண்காட்சி அடுத்த மாதம் நடைபெறுகிறது. அதற்காக பாட்னாவிலுள்ள புத்தரின் சின்னங்களை அனுப்பும்படி இலங்கை அரசு கேட்டது. இது தொடர்பாக இந்திய மத்திய அரசுக்குக் கடிதம் ஒன்றும் அனுப்பியது. இதைத் தொடர்ந்து மத்திய சுற்றுலா மற்றும் கலாசாரத் துறை அமைச்சகம் பீகார் அரசுக்கு கடிதம் எழுதியது.

ஆனால், இலங்கை அரசின் கோரிக்கையை பீகார் அரசு நிராகரித்துவிட்டது. இதுகுறித்து மாநில சுற்றுலா அமைச்சர் நந்த கிஷோர் யாதவ் கூறும்போது, ''அந்த நினைவுப் பொருள்கள் புனிதமானவை. அதை சாதாரண பொருட்கள் போன்று கருதி உலகின் எந்தவொரு பகுதிக்கும் அனுப்பிவைக்கமுடியாது. அவர்கள் உண்மையிலேயே அவற்றைப் புனிதாமாகக் கருதினால் இங்கு வந்து பார்க்கவேண்டும். இல்லாவிட்டால் புத்த மதத்தைத் தழுவியுள்ள ஒவ்வொரு நாடும் இதே வழியைப் பின்பற்றத் தொடங்கிவிடும்'' - என்றார்.

மேலும், மத்திய அரசுக்கு பீகார் அரசு எழுதிய பதில் கடிதத்தில் ''இந்த விலை மதிப்பற்ற நினைவுப் பொருட்களை அனுப்புவது முறையானது அல்ல. அபூர்வமான இந்தப் பொருள் தொலைந்து விட்டால் மீண்டும் பெறுவது இயலாது'' என்று குறிப்பிட்டுள்ளது. (ம-க)


A2Z COM.COM இன் அதிர வைக்கும் அறிமுகம்

தரம் வாய்ந்த

Flash memory Sticks:.(USB)

With Password protection

256 MB Only for 2950/=

512 MB Only for 4200/=

(1 Year Warranty also included)

முதலில் கொள்வனவு செய்யும் 20 வாடிக்கையாளர்களில் அதிர்ஷ்டசாலிக்கு

இலவசம்

1GB Flash Memorystick

மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு சலுகை விலைகள்..

@ 192, Navalar Road, Jaffna

கையிருப்பு உள்ளவரை மட்டுமே !



படிவம்

* தேசிய கல்விக் கல்லூரி

* விவசாயக் கல்லூரி

அநுமதி பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் உண்டு.

முடிவுத்திகதி

26.06.2006 - 07.07.2006

Bharathy Pathippakam.
430, K. K. S. Road, Jaffna.


## பங்கீட்டு அட்டைக்கு 5 லீற்றர் மண் எண்ணெய்

அரியாலை,மே29

குடாநாட்டிலுள்ள சில எரிபொருள் விற்பனை நிலையங்களில் பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு 5 லீற்றர் மண்எண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதேசமயம் கூட்டுறவுச் சங்கக் கடைகளிலும் பங்கீட்டு அட்டைக்கு 2 லீற்றர் மண் எண்ணெய் விநியோகிக்கப்படுகின்றது.

(17)

## சமய சந்நிதிகளில்

காரைநகர்,மே29

கரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் வேள்வி உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் அம்பாளுக்கு விஷேட அபிஷேக ஆராதனையும் தொடர்ந்து பொங்கல் வேள்வியும் இடம்பெறவுள்ளது.

(73)

* * *

தென்மராட்சி,மே29

சாவகச்சேரி சப்பச்சிமாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் இரண்டாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 10ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

(117)

# பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு அலுவலரின் கொடுப்பனவு அதிகரிப்பு

அச்சுவேலி,மே29

பரீட்சை தொடர்பான கடமைகளில் ஈடுபடுபவர்களின் கொடுப்பனவுகளை பரீட்சைத் திணைக்களம் அதிகரித்துள்ளது.

தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இருந்து அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்படவிருப்பதாக பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

பரீட்சை மேற்பார்வை தொடர்பான கடமைகளில் ஈடுபடுபவர்களின் கடமை நாள்களுக்கான கொடுப்பனவு விவரம் வருமாறு-

இணைப்பு அலுவலர் 650 ரூபா, உதவி இணைப்பு அலுவலர் 600 ரூபா, இணைப்பு நிலையச் சிற்றூழியர் 400 ரூபா.

பிராந்திய ஒன்று சேர்ப்பு நிலைய நிர்வாகி 700 ரூபா, உதவி நிர்வாகி 625 ரூபா, எழுதுவினைஞர் 550 ரூபா, சிற்றூழியர் 400 ரூபா, மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேற்பார்வை 750 ரூபா.

பரீட்சை நிலைய நிர்வாகக் குழுவுக்கான கொடுப்பனவு விவரம் வருமாறு -

பரீட்சை மேற்பார்வையாளர் 550 ரூபா, உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர் 500 ரூபா, நோக்குநர் 450 ரூபா, மண்டபச் சிற்றூழியர் 300 ரூபா, பரீட்சை மண்டப ஒழுங்குபடுத்த 60 பரீட்சார்த்திகளுக்கு 300 ரூபா அறுபதுக்கு மேற்பட்டால் 600 ரூபா.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடுபவர்களின் கட்டணமும் 20 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களுக்கான பிரயாணக் கொடுப்பனவும் தூர அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. (11)

## மரண அறிவித்தல்கள்

### மாதர் செல்லத்துரை



அச்சுவேலி தெற்கு பயிற்றோலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாதர் செல்லத்துரை 26.05.2006 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாதர் - இளைய பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற இராமலிங்கம் - சின்னாச்சி தம்பதிகளின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன், கேமேஸ்வரி (சுவிஸ்) காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் ஜீவாகரன் (லண்டன்), ஞானகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஷ்பராணி, சுபாஸ்கரன் (சுவிஸ்), யாழினி (லண்டன்), கஸ்தூரி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் இராசா, தம்பித்துரை, கதிரவேலு, தம்பிராசா ஆகியோரின் சகோதரனும் சின்னத்தங்கச்சி (கனடா), நடராசா (ஆஸ்திரேலியா), கனகம்மா (பிரான்ஸ்), கனகசபை (பிரான்ஸ்), சுப்பிரமணியம், நாகரத்தினம், செல்வநாயகம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஜனனி, சகீனா, தினேஷ், நிரோஜி, சங்கீதா, சாருஜன், சஜிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் முழக்கன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பயிற்றோலை,*
*அச்சுவேலி.*

(சி/49462)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

### சாமுவேல் பெனடிக்ற்

*(இளைப்பாறிய ஆசிரியர்)*



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல் பெனடிக்ற் அவர்கள் 27.05.2006 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை சாமுவேல் செசிலியா நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தெரேசா பிரான்சிஸ், இம்மானுவேல் யோசவ், மேரி றோஸ் பிளசம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிறேமாவதியின் அன்புக் கணவரும் விமலச்சந்தின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஜசிந்தா லொட்ஜ்,*
*சென். அன்ரனீஸ் லேன்,*
*பண்டத்தரிப்பு.*

(50642)

தகவல்:-
பிறேமாவதி (மனைவி)
விமலச்சந்த் (மகன்)

## கண்ணீர் காணிக்கை



எமது பாடசாலையின் சங்கீத ஆசிரியை திருமதி சிநோமினி - நந்தகுமாரின் அன்புத் தாயும் எமது பாடசாலை நலன் விரும்பியும் சேவையாளனும், மாகாணக் கல்வி. அமைச்சு நூலகருமாகிய கை.நந்தகுமாரின் அன்பு மாமியுமாகிய

### திருமதி இராஜநாயகம் சரஸ்வதி

அவர்கள் கனடாவில் காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை கண்ணீர்க் காணிக்கையாக்கி நிற்கின்றோம்.

யா/உயரப்புலம் மெ.மி.த.க.
வித்தியாலயம், ஆனைக்கோட்டை.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

திருமதி கலைவாணி நாதசொரூபன் அவர்களின் தந்தையார்

### அமரர் சீனியர் நடராசா

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
பொன். பரமானந்தர் ம.வி. குரும்பசிட்டி.

(50640)


வேலை ஆள் தேவை

சமயல் ஆள் - 1
உதவியாளர் - 1

நற்சான்றிதழ்களுடன்
29.05.2006 - 31.05.2006 திகதிகளில்
சமுகம் தரவும்
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

SKY LINE RESTAURANT

198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 7539 (50641)



ராஜா யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த

பட்டியல்

புதிய வெளியீடு

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்



நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும்
கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்சனின்

கிங் - கொங் King Kong

தங்கத் தமிழ் மொழியில்
[பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை]
காட்சி நேரம் : 10.30, 2.30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிரச்சினையில் என்ன முடிவெடுப்பது? இந்தியா தானேதான் தீர்மானிக்கவேண்டும்

## இப்படிச் சொல்கிறது அமெரிக்கா

வாஷிங்ரன், மே 29

இலங்கையில் தற்போது நிலவிவரும் அமைதியற்ற சூழ்நிலையில் எத்தகைய நடவடிக்கையை - முடிவை - எடுப்பது என்பது குறித்து இந்தியா தானேதான் தீர்மானிக்க வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பான இணைத் தலைமை நாடுகளின் முக்கிய கூட்டம் இன்று ஜப்பானில் நடைபெறவுள்ளது. அதில் இந்தியாவையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்ட பின்னணியில் அமெரிக்காவின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இலங்கை விவகாரம் குறித்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பில் இந்தியாவுடன் தொடர்ந்து பேச்சுக்களை அமெரிக்கா நடத்திவருகிறது என்று அந்நாட்டு இராஜாங்கத்துறைப் பிரதி அமைச்சர் நிச்சாட் பௌச்சர் தெரிவித்துள்ளார். செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்கள் மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளன. விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளனர். அவர்கள் இலங்கை அரசுடன் சமாதானப் பேச்சைத் தொடருவதைவிட, போரை நோக்கிச் செல்வதிலேயே முனைப்பாக இருக்கின்றனர் எனத் தெரிகிறது. அதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்பது அவசியம். ஆனால் சமாதானப் பாதையில் செல்வது இல்லை என அவர்கள் முடிவு செய்துவிட்டார்கள் போலத் தெரிகிறது.

இலங்கைப் பிரச்சினையில் தாம் என்ன நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்பதை இந்தியாதான் முடிவுசெய்துகொள்ள வேண்டும். அப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில், சர்வதேச சமுதாயத்துடன் எந்த வகையில் இணைந்து செயலாற்றுவது என்பதையும் இந்தியாதான் முடிவுசெய்ய வேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் கருத்து என்ன என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். அடுத்து, சர்வதேச சமுதாயம் என்ன நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்ட நோர்வே எடுத்துவரும் முன்முயற்சிகளை அமெரிக்கா ஆதரிக்கிறது.

டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைப் பிரச்சினை தொடர்பான கூட்டதில் இலங்கை நிலவரம் குறித்த அமெரிக்காவின் கருத்துகள் தெரிவிக்கப்படும் - என்றார் ரிச்சாட் பௌச்சர். (ம)

# சமாதானத்தை நேர்மையாக முன்னெடுத்தால் ஐ.தே.கட்சி அதற்கு முழுமையாக ஆதரவு தரும்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் கூறுகிறார்

கொழும்பு, மே 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அச்சப்படாமல் - வெட்கப்படாமல் நேர்மையான முறையில் சமாதானத்தை உருவாக்க முன்வந்தால் அம்முயற்சியை வெற்றியளிக்கச் செய்ய ஐக்கிய தேசியக் கட்சி அதிகபட்ச ஆதரவை வழங்கத் தயாரகவிருக்கிறது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற வடக்கு - கிழக்கில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசிக் கட்சி ஏற்படுத்திய அமைதியான சூழல் இல்லாமல்போய் நாட்டில் யுத்தம் ஒன்று தோன்றும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எம்மால் உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் சரியான முறையில் பாதுகாக்கப்படாமையே இந்த நிலைமைக்குக் காரணம்.

இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் காரணமாகவே அதிகளவான உயிர்கள் பாதுகாக்கப்பட்டன என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். ஆனால், ஜே.வி.பியினரும், அரச தரப்பினரும் இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை விமர்சிக்கிறார்கள்.

இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் இருக்கின்றன என்று கூறி அதை மோசமாக விமர்சித்து வருகின்றனர். அதில் குறைபாடுகள் இல்லையென்று நாம் சொல்லவில்லை. உலகிலே ஏற்படுத்தப்பட்ட எந்தவொரு யுத்தநிறுத்த ஒப்பந்தமும் குறைபாடு இல்லாததாகக் காணப்படவில்லை.

சில நாடுகளில் செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தங்கள் ஏழு எட்டு வருடங்கள் கடந்த பின்பே சரியான முறையில் இயங்கிய வரலாறும் உண்டு.

குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டுங்கள் தப்பில்லை. அதற்காக அதைப்பின்பற்றாமல் ஒதுக்கிவிடமுடியாது. யுத்தநிறுத்த ஒப்பந்தம் இல்லாமல் எந்த நாட்டிலும் நிலையான சமாதானம் ஏற்பட்டதாக வரலாறு இல்லை.

உலகில் உள்ள 50 இற்கும் மேற்பட்ட நாடுகள் இலங்கையின் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. அதைப் பின்பற்றினாலேயே நிலையான சமாதானம் ஏற்படுவதற்கான ஒரு சாதகமான சூழல் ஏற்படும் என அந்நாடுகள் இலங்கைக்கு எடுத்துக்கூறியும் உள்ளன.

இந்த நாட்டு மக்களின் நன்மை கருதி ஜனாதிபதி யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பலப்படுத்தி சமாதானத்தை நிலைநாட்ட முன்வர வேண்டும். இது தொடர்பாக அவர் உண்மையாகச் செயற்பட்டால் நாம் முழு ஆதரவையும் ஜனாதிபதிக்கு வழங்குவோம் - என்றார். (ம-க)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மொரட்டுவவில் சுட்டுக் கொலை!

## நேற்று அதிகாலை பயங்கரம்

மொரட்டுவ, மே 29

மொரட்டுவ லக்ஷபதி கன்னங்கர வீதியில் நேற்று ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

அதிகாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. உயிரிழந்தவர்களில் ஒருவர் இளம்பெண் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்கள் உறக்கத்திலிருந்தவேளை இவர்களது வீட்டுக்குள் நுழைந்த ஆயுததாரிகள், மூவரையும் சுட்டுக் கொன்று விட்டுச் சென்று விட்டனர் என்று கூறப்பட்டது.

மொரட்டுவ பொலீஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-க)

# வில்பத்து குண்டுவெடிப்பில் சிக்கி உயிரிழந்தோரின் சடலங்கள் மீட்பு

கொழும்பு, மே 29

வில்பத்து சரணாலயக் காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்த 7 பேரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

இவற்றில் 5 சடலங்களே முழுமையாக மீட்கப்பட்டன. ஏனைய இரண்டு சடலங்களும் அடையாளம் காணமுடியாத அளவிற்கு சிதைந்து போயிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இவற்றில் மூன்று ஆண்களின் சடலங்களும், இரண்டு பெண்களின் சடலங்களும் இனங்காணக் கூடியவகையில் இருந்தன என்றும், ஏனைய இரு சடலங்களும் சிதைந்த நிலையில் காணப்பட்டன என்றும் கூறப்பட்டது.

சுற்றுலாப் பயணிகளான கொழும்பு - 07, ரொஸ்மீட் பிளேஸைச் சேர்ந்த சண்டி ஆசீர்வாதம், அவரது மனைவியான அனுலா ஆசீர்வாதம், டெரல் பெரேரா, நிஹால் சில்வா, நந்தா அபேயசூரிய, ஹென்றி ஜஸ்டீன் மற்றும் வழிகாட்டியான அனுர திஸநாயக்க ஆகியோரே உயிரிழந்தனர் என்று அடையாளம் காணப்பட்டனர். (ம-க)

### ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேசத் தடை எதிர்கால அமைதிப் பேச்சுக்களைப் பெரிதும் பாதிக்கும்." - என புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் கூறியிருக்கிறார் என்பதை 'த பினான்ஸ் ரைம்ஸ்' பத்திரிகை தனது செய்தியில் நினைவூட்டியிருக்கிறது. (ம-க)

### வட்டுக்கோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் இவர்களைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் எனக் கூறப்பட்டது. (ம)

### இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு இருக்கிறது என்றும் அது தொடர்பாகத் தெளிவான கருத்து எதுவும் கூற முடியாது எனவும் குறிப்பிட்டார். எனினும், இத்தகைய தடையுத்தரவு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளை மோசமான முறையில் பாதிக்கும் எனவும் எச்சரித்தார்.

மேலும் கடல் பகுதியில் புலிகளுக்கு உரிமையில்லை எனக் கண்காணிப்புக் குழு கூறியது தொடர்பாக செய்தியாளர் கேட்டதற்கு போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இலங்கையின் கடல் உரிமம் தொடர்பாகத் தெளிவாகக் குறிப்பிடப்படாமையே அப்பிரச்சினைக்குக் காரணம் எனப் பதிலளித்தார் சொல் ஹெய்ம்.

### முகமாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரவீர தெரிவித்தார்.

வெடிப்பொருள்கள் கைப்பற்றப்பட்டதை அடுத்து லொறிகளின் சாரதிகள் கைதுசெய்யப்பட்டனர். எனினும் அவர்கள் அனைவரும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு விட்டனர் என்று இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இந்த வெடி பொருள்கள் சாரதிகளுக்குத் தெரியாமலேயே வாகனங்களில் வைக்கப்பட்டிருக்கலாம் என்று இராணுவத்தினர் நம்புகின்ற காரணத்தாலேயே சாரதிகள் விடுவிக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை, தமது சங்கத்தைச் சேர்ந்த 20 லொறிகளைக் காரணங் கூறாமல் இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளனர் என்று யாழ். மாவட்டப் பாரஊர்தி உரிமையாளர் சங்கம் யாழ். அரச அதிபருக்கு அறிவித்துள்ளது. (ம)

### புலிகள் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின்போது இணங்கப்பட்ட வாக்குறுதிகளை பூரணமாக நிறைவேற்றுவதன் மூலம் பெருமளவு நம்பிக்கையைக் கட்டிவளர்க்க முடியும். அரசியல் முதிர்ச்சியாலும் தேசத்தைக் கட்டி ஆளும் அரசுத் தலைமைத்துவத்தாலும் இதனை வெளிக்காட்டலாம் என்றும் சொல்ஹெய்ம் தனது உரையாடலின்போது குறிப்பிட்டார் எனவும் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளின் தனி நாட்டு இலட்சியப் போராட்டத்தை எதிர்கொள்வதற்கு இலங்கை அரசு நல்ல ஆக்கபூர்வமானதும், நம்பிக்கை ஊட்டக்கூடியதுமான அரசியல் தீர்வொன்றை சமஷ்டி கட்டமைப்புக்குள் தயாரித்து மக்கள் முன் வைக்கவேண்டுமென்று இலங்கையை இந்தியா கேட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் அமைதியை நிலைநாட்டி நாட்டின் உறுதிப்பாட்டையும், ஸ்திரத்தரன்மையையும் மேம்படுத்துவதற்கும் இந்தியா கூடுதல் பங்களிப்பை வழங்கவேண்டும் என்றும் எரிக் சொல்ஹெய்ம் இந்த சந்திப்பின்போது கேட்டுக்கொண்டார் எனவும் அறியவருகிறது. (ம-க)

# கோயிலாக்கண்டியில் துப்பாக்கிச் சண்டை 2 படையினர் காயம்!

யாழ்ப்பாணம், மே 29

தென்மராட்சியின் தென் பகுதியில் கோவிலாக்கண்டி கிராமத்தில் இடம்பெற்ற சிறு துப்பாக்கிச் சண்டையில் இரு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ரோந்து சென்றுவிட்டு முகாம் திரும்பிக்கொண்டிருந்த படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

முதலில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னர் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றதாகவும் தகவல்கள் கூறின. சுமார் 10 நிமிடங்கள் தொடர்ந்த அந்தச் சண்டையில் காயமடைந்த இரு சிப்பாய்கள் உடனடியாக ஹெலி மூலம் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டனர். (ம)

# தெமோதர விபத்தில் மாணவர்கள் காயம்

பண்டாரவளை - பதுளை பிரதான வீதியில் தெமோதர பழைய தேயிலைத் தொழிற்சாலைக்கு அருகில் இரு பஸ்கள் மோதியதில் பலர் காயமடைந்தனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற தனியார் பஸ் ஒன்றும், கடுகதி சொகுசு பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. பத்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்த நிலையில் பதுளை மாகாண வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பதுளையிலிருந்து பண்டாரவளை நோக்கிச் சென்ற தனியார் பஸ் பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச்சென்ற பஸ்ஸை முந்திச் செல்ல முயன்றபோதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான விசாரணைகளை அல்ல பொலீஸாரும், பண்டாரவளைப் பொலீஸாரும் கூட்டாக இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

### புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரான மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வாவை திருமலை அரச அதிபராக அரசு நியமித்துள்ளது. அவர் இந்த வாரத்தில் தனது பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார். அவரது நியமனம் தொடர்பாகவே புலிகள் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர்.

கடற்படையில் இருந்து ஓய்வு பெற்ற ஒருவரை ஏற்கனவே வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக அரசு நியமித்துள்ளமையையும் புலிகள் கண்காணிப்புக் குழுவிற்குச் சுட்டிக்காட்டியுள்ளனர். இத்தகைய நடவடிக்கைகள் மாவட்ட சிவில் நிர்வாகத்தைப் படிப்படியாக இராணுவமயப்படுத்தும் செயற்பாடே என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

### உலகெங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்ற யதார்த்தப் புறநிலையையும் புரிந்துகொண்டு - புலிகள் மீது தடை விதிப்பதை ஐரோப்பிய ஒன்றியம் கைவிட வேண்டும் என்று உலகெங்கிலும் வாழுகின்ற ஈழத் தமிழர்கள் இன்று உரிமைக்கோஷம் எழுப்பவிருக்கின்றனர்.

"எங்களின் உறவுகளுக்காய் இன்னொரு முறை முயல்வோம். மேற்கின் இதயங்களில் ஈரம் வேண்டி ஒலிப்போம். எங்கள் சொந்தங்களுக்கு நாங்களேனும் உள்ளோம் என்று உரத்துக் குரல் கொடுப்போம்." - என்ற அடிப்படைக் கோஷத்துடன் இன்றைய நிகழ்வுகள் நடைபெறவிருக்கின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் நடைபெறுகின்ற இந்த 'உரிமைக் குரல்' எழுச்சி நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் அணிதிரள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org